# உதயன்

சுடர் : 36 கதிர் : 210 | வியாழக்கிழமை | ஆனி 10 ஆம் நாள் 24 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




## தமிழ் அரசியல் கைதிகள் 17 பேரை விடுவிக்க பரிந்துரை!

### இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 24
நீண்டகாலம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 17 பேரை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்வதற்கான பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

19 ➤

## தமிழ்க் கூட்டமைப்புடன் விரைவில் பேசுவேன்!

### சம்பந்தனுக்கு கோத்தா கடிதம்

கொழும்பு, ஜூன் 24
"தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளேன். ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த சந்திப்பு பிற்போடப்பட்ட

19 ➤

## ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வேண்டும்!

### அதற்குரிய வேலைகளே நடக்கின்றன அவரது கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருப்பதன் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மாறாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர் ஜனாதிபதியாக வேண்

19 ➤

## தொற்றால் வடக்கில் இரு சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் ஒவ்வொருவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர். யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்

19 ➤

## அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி போராடுவர்

### முருந்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 24
அரசின் முறையற்ற செயற்பாட்டால் நாட்டு மக்கள் நாளாந்தம் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். அரசுக்கு எதிராக நாட்டு

19 ➤

## குருநகரில் முடக்கப்படவுள்ள இரு கி.அலுவலர் பிரிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இரு கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கப்படவுள்ளன என்று சுகாதாரப் பிரிவு தெரிவித் திருக்கின்றது. குருநகர் பகுதியில்

19 ➤

## இன்று பயணத்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 24
நாடு முழுவதும் நேற்றிரவு 10 மணி தொடக்கம் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்று முழுவதும் பயணத்தடை தொடரவுள்ளது.

17 ➤



## கிளிநொச்சி விபத்தில் குடும்பத்தலைவர் சாவு!

### சாரதி வாகனத்துடன் தலைமறைவு

கிளிநொச்சி, ஜூன் 24
கிளிநொச்சியில் இடம்பெற்ற கோர விபத்தில், குடும்பத்தலைவர் ஒருவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். எனி

19 ➤

## சாவு 65

கொழும்பு, ஜூன் 24
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்றுமுன்தினம் 65 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்

19 ➤

## அல்வாயில் பொங்கல், வேள்வி 30 பேர் தனிமை: நிர்வாகி கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடமராட்சி அல்வாய் பகுதியில் கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி, பொங்கல் திருவிழா நடைபெற்றதால், அதில் பங்கேற்ற 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். குறித்த கோவில் நிர்வாகி கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த கோவிலில், வழிபாட்டு நிகழ்வில், சுமார்

17 ➤



## கொரோனா விதிமுறை மீறி திருமணம் மணமகனுக்கு நீதிமன்று 20 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
பண்டத்தரிப்பில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பயணத்தடைக் காலத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வு தொடர்பில் மணமகனுக்கு மல்லாகம் நீதிமன்றம் கடுமையான எச்சரிக்கையுடன் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

17 ➤

## வடக்கில் 52 யாழில் 39

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணத்தில் மட்டும் 39 பேர் உட்பட வடக்கில் 52 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று

19 ➤

## யாழ்.பல்கலையில் மற்றொரு கற்கை

(விரிவு பக்கம் - 09)


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி
021 493 0000
077 1209994

விளம்பரம்
021 493 1111
071 6182182

மக்களை நாடும் தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைரஸ் திரிபுகளை ஆய்வுசெய்யவேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை

**கொழும்பு, ஜூன் 24**

**நாட்டில் எவ்வகையான வைரஸ் திரிபுகள் காணப்படுகின்றன? அவற்றின் பாதிப்புக்கள் என்ன? எவ்வாறு பரவலடைகின்றன என்பது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். இதன் ஊடாகவே இதனால் ஏற்படும் உயிரிழப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடியும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான வாசன் ரட்ணசிங்கம்,

இலங்கையில் பல்வேறு வைரஸ் திரிபுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. டெல்டா பிளஸ் திரிபு இந்தியாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த அதிவேகத் திரிபுகள் இலங்கையைத் தாக்குவதற்கு சாத்தியம் அதிகம்.

இலங்கையில் வைரஸ் திரிபுகள் தொடர்பான ஆய்வுகள் சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மாத்திரம்தான் இடம்பெறுகின்றன. சுகாதார அமைச்சு தனக்கு உட்பட்ட மருத்துவமனைகளிலும் அது தொடர்பான சோதனைகளை ஆரம்பிக்கவேண்டும்.

திரிபுகள் எவ்வாறு பரவலடைகின்றன? அவற்றின் குணவியல்பு எப்படி காணப்படுகின்றன? இது தொடர்பில் எல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். திரிபுகள் உருவாவதை தடுக்க முடியாவிட்டாலும் கூட, அதனால் ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்க ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ஒ.5)

## வீதியால் பயணிப்போரைத் தாக்கும் காகங்களும், கருங்குளவிகளும்

சாவகச்சேரி, ஜூன் 24

சாவகச்சேரியில் இருந்து தனங்களப்பு வரையான வீதியில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் காகங்கள் மற்றும் கருங்குளவிகளால் தாக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

தென்மராட்சி தெற்குப்பகுதி பிரதேசத்துக்கு செல்லும் மக்களும், ஏ - 32 வீதியில் பயணிப்பதற்குச் செல்வோரும். சாவகச்சேரி தனங்களப்பு வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

வீதியோரத்தில் காணப்படும் பனை மரங்களில் கூடு கட்டியுள்ள காகங்கள் மற்றும் வீதியோரத்தில் காணப்படும் எருக்கலை மரங்களில் கூடு கட்டியுள்ள கருங்குளவிகள் வீதியில் செல்வோரைத் துரத்தி தாக்குகின்றன.

நேற்றுமுன்தினம் மாலை இவ்வீதியில் கைக்குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பத்தினரை காகங்களும், குழவிகளும் துரத்தின எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடலேரியுடன் இவ்வீதி அமைந்துள்ளதால் உடல் நலத்துக்காக மாலை வேளைகளில் நடந்து செல்வோர் காகங்கள் மற்றும் குளவிகளின் அச்சுறுத்தலால் தற்போது நடந்து செல்வதில்லை எனவும் தெரிவித்தனர். (ஐ-9)

# சமூகப் பரவலடைந்தது கொரோனாத் தொற்று

### *உண்மையை மறைக்க வேண்டாமென எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 24

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று சமூகப் பரவலடைந்துள்ளது. எனவே எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரித்து, அதன் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்தாவிட்டால், நாடு பாரதூரமான நிலைமையை அடையும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுக் குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவிக்கையில்,

அநாவசியமான முறையில் நாட்டை திறந்து வைத்திருப்பது எதிர்வரும் நாள்களில் பாரதூரமான பிரதிபலனை வழங்கும். தடுப்பூசி வழங்குவதால் எவ்வித பாதிப்புக்கும் முகங்கொடுக்க நேரிடாது என்று எண்ணுவார்களாயின், அது தவறாகும். உலக நாடுகள் 80 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருந்தாலும், தொற்றுப் பரவும் அபாயத்திலிருந்து பாதுகாப்பு பெற முடியாது என்று தெரிவித்துள்ளன.

நாட்டில் 80 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டிருந்தாலும், சமூக இடைவெளியைப் பேணல் உள்ளிட்ட அடிப்படை சுகாதார விதிமுறைகளை முறையாகக் கடைபிடிக்காவிட்டால் டெல்டா பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், தடுப்பூசி வழங்குதல் மற்றும் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றல் என்பவற்றின் ஊடாக மாத்திரமே டெல்டா பரவலைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறான நிலைமையில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளமையை பொதுமக்கள் தவறாக





புரிந்துகொண்டுள்ளனர். மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளை குறைப்பதற்காக மாத்திரமே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதனை உணர்ந்து செயற்படாவிட்டால் டெல்டா பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. இந்த நிலையில் தொற்று நோயியல் பிரிவு பல பிரதேசங்களில் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரித்து, அதன் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்தாவிட்டால் நாடு பாரதூரமான நிலைமையை அடையும். தற்போது நாட்டில் சமூகத் தொற்று ஏற்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை தொற்று நோயியல் பிரிவினாலேயே ஸ்திரமாகக் கூற முடியும்.

நாட்டில் தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலைமையை அவதானிக்கும் போது, சமூகத் தொற்று ஏற்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது. எனவே தொற்றுப் பரவல் தொடர்பில் உண்மையான தகவல்கள் கிடைக்கப் பெறுவதை அடிப்படையாகக் கொண்டே போக்குவரத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் - என்றார். (ஒ.4)

# அரசின் முறையற்ற திட்டங்களால் பொறிக்குள் சிக்கியுள்ள மக்கள்

கொழும்பு, ஜூன் 24

அரசின் முறையற்ற திட்டங்களால், நாட்டு மக்கள் பொறிக்குள் சிக்கியுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகரித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதமரிடம் பெரிய வெங்காயத்தின் விலை என்ன? அண்மையில் உருளைக்கிழங்கு சாப்பிட்டீர்களா? பருப்பு விலை எப்படி? இறுதியாக நாட்டு மக்களை இந்த பொறியில் சிக்க வைத்த உங்களுக்கு இப்பொழுது சந்தோசமா? என்ற கேள்விகளைக் கேட்கின்றேன்.

நாட்டில் தற்பொழுது காணிகள் கொள்ளையிடப்பட்டு வருகின்றன.

நெல், தேயிலை, கிழங்கு, மரக்கறி விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

அரசால் அறிமுகம் செய்யப்படும் இயற்கைப் பசளைத் திட்டத்தால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தரிசு நிலங்களை செழிக்கச்செய்வோம் என்று கூறி ஆட்சிபீடம் ஏறிய அரசு விவசாய நிலங்களையும் அழித்து வருகின்றது. அரிசியில் தன்னிறைவை ஏற்படுத்துவோம் என்று உறுதிமொழி வழங்கிய அரசு தற்பொழுது ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்கின்றது- என்றார். (ஒ-4)

# கிருஸ்ணபுரம் மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூன் 24

கிளிநொச்சி, கிருஸ்ணபுரம் தொற்று நோயியல் மருத்துவமனையின் பயன்பாட்டுக்காக வரன்டீனா அபிவிருத்தி சேவைகள் நிறுவனத்தால் 6 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நேற்று கையளிக்கப்பட்டுள்ளன.





மருத்துவ உபகரணங்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்களே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளால் கிளிநாச்சி மாவட்டச் செயலரிடம் குறித்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், அவை சுகாதார சேவைகள் பயன்பாட்டுக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ப-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை முதல் வாரத்தில் 2 மில்லியன் தடுப்பூசிகள்




கொழும்பு,ஜூன் 24

**சீனாவின் இரண்டு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் ஜூலை மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்குக் கிடைக்கும்.**

இவ்வாறு ஔடத உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார். சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட ஒருதொகுதிசைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு படிப்படியாகக் கிடைத்துவருகின்றன. அவற்றை மக்களுக்குச் செலுத்தும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல் டோஸ் மற்றும் இரண்டாவது டோஸ் என்ற அடிப்படையில் குறிக்கப்பட்ட காலத்தில் தடுப்பூசிகள் பரவலாக மக்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக 14 லட்சத்து 48 ஆயிரத்து 601 பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும், 4 லட்சத்து 70 ஆயிரத்து 870 பேருக்கு இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளது. (4)



# குடாநாட்டில் 4, 919 பேராக தொற்றாளர்கள் அதிகரிப்பு

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4ஆயிரத்து 919 ஆக அதிகரித்துள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்தில் இதுவரை 72 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். தற்போது உடுவில் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரத்து 721 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 71 நபர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்- என்றார். (ப-26)



# கடல் உணவுகளை தயங்காது உண்ணலாம்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 24

இலங்கையில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால், கடல் வளத்துக்கே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது ஆழ்கடலில் இருந்தே கடல் உணவுகள் கொண்டுவரப்படுகின்றன. எனவே கடல் உணவுகளை உட்கொள்ள மக்கள் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்று இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விசேட கேள்வி நேரத்தில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தை அடுத்து. மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர் பிரேமலால் தொலவத்த கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர,

கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர் குடும்பங்கள் மற்றும் மீன்பிடித் தொழிலுடன் இணைந்த தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்களுக்கும் தற்காலிக நிவாரணத்தைக் கொடுக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பல் உரிமையாளர்களிடம் இருந்து நஷ்டஈடு கோரப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். அதேபோன்று கப்பல் விபத்தால் ஏற்பட்டுள்ள சகலவிதமான பாதிப்புகளுக்கும் ஏற்ற வகையிலான நஷ்டஈடு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மீன்பிடியில் ஈடுபடக்கூடிய பகுதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்படும். மீனவர்களுக்கான எரிபொருள் சலுகையும் பெற்றுக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாரா நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின்படி கடல் உணவுகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே கடல் உணவுகளை உட்கொள்ள முடியும்.

கடல் உணவுகளை உண்பதற்கு எந்த அச்சமும் இல்லை. நாம் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டே கடல் உணவுகளைக் கொண்டு வருகின்றோம். ஆகவே மக்கள் அநாவசியமான அச்சம் கொள்ளத் தேவையில்லை- என்றார். (ஒ.4)

# கடலுணவு, மரக்கறி விலை அதிகரிப்பு

## நுகர்வோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரக்கறி மற்றும் கடலுணவுகளின் விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விலை அதிகரிப்பால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சகல மரக்கறி வகைகளும் கிலோ நூறு ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன. முருங்கைக்காய் கிலோ 800 ரூபாவாக விற்கப்படுகின்றது. அதேசமயம் கடலுணவுகளின் விலையும் அதிகரித்து விற்கப்படுகின்றன.

பாஷையூர், கொட்டடி, குருநகர் சந்தைகளில் கடலுணவுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு அவற்றின் விலைகளும் அதிகரித்து காணப்படுகின்றன. இறால் கிலோ ஆயிரத்து 400 ரூபா, கணவாய் கிலோ ஆயிரம் ரூபா, நண்டு கிலோ ஆயிரத்து 200 ரூபா, மீன் கிலோ ஆயிரம் ரூபா, திருக்கை கிலோ 700 ரூபாவாக விற்கப்படுகின்றன. (ஐ-17)

# ஓட்டமாவடி மையவாடியில் 729 உடல்கள் அடக்கம்

மட்டக்களப்பு, ஜூன் 24

கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த உடல்களை அடக்கம்செய்யும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் "மஜ்மா நகரில்" அமைந்துள்ள கொரோனா மையவாடியில் நேற்று மாலை வரை 729 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று ஓட்டமாவடி பிரதேச சபைச் செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன் தெரிவித்தார்.

690 முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், இந்துக்களின் 15 உடல்களும், 15 கிறிஸ்தவர்களின் உடல்களும்; 07 பௌத்தர்களின் உடல்களும், 02 வெளிநாட்டவர்களின் உடல்களுமாக மொத்தம் 729 உடல்களே அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று பிரதேச சபைச் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ப)



# இலங்கை- இந்தியா இடையே நெருங்கிய உறவு தொடரும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதி

கொழும்பு,ஜூன் 24

இனிவரும் காலங்களிலும் இலங்கை மற்றும் இந்தியா இடையே நெருங்கிய தொடர்பு பேணப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜெய்ஷங்கர் தனது ருவிற்றர் பக்கத்தில்,

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடனான கலந்துரையாடல் சிறப்பானதாக அமைந்தது.

இதன்போது இருதரப்பு நிகழ்ச்சி நிரல் மற்றும் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. பிம்ஸ்டெக் மற்றும் இந்திய பெருங்கடல் ஒத்துழைப்பு அமைப்பு உள்ளடங்கலாக பிராந்திய ரீதியில் காணப்படும் பல்வேறு கட்டமைப்புக்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன என்று பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் சீனாவின் ஆதரவுடனான கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் தொடர்பில் பலதரப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், பிம்ஸ்டெக் அமைப்பின் ஊடாக பிராந்திய ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான அழுத்தத்தை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியா முயற்சிக் கின்றது என்று இந்திய ஆங்கில ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது. பிம்ஸ்டெக் என்று அழைக்கப்படும் வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார கூட்டுறவுக்கான முன்னெடுப்பில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், மியன்மார், தாய்லாந்து, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அதேபோன்று இந்தியப் பெருங்கடல் ஒத்துழைப்பு அமைப்பானது இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிசெய்தல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக 23 நாடுகளின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிட்ரோ காஸ் நிறுவனம் பெரும் ஊழல் மோசடி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, 24

**சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அனுமதிக்காத நிலையில், மோசடியான வகையில் விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ள லிட்ரோ காஸ் நிறுவனம், பெரும் ஊழல் மோசடியை மறைத்துள்ளது என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய சமையல் எரிவாயு சிலிண்டரை அறிமுகப்படுத்துவோம் என்று கூறியே லிட்ரோ காஸ் நிறுவனம் 12.5 கிலோவாக இருந்த சிலிண்டரின் நிறையை 9.8 கிலோவாகக் குறைத்து, சிலிண்டரின் விலையை 100 ரூபாவால் குறைத்துள்ளது. ஆனால் இருந்த விலையை விடவும் புதிய சிலிண்டரில் கிலோ ஒன்றின் விலை 32 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நுகர்வோர் ஏமாற்றப்பட்டுள்ளனர். நுகர்வோர் அதிகார சபை எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு இடமளிக்காத போதும், மோசடியான வகையில் விலையை அதிகரிக்க நடவடிக்கையெடுத்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபை இந்த விடயம் தொடர்பில் வழக்குத் தொடரப்படும் என்று தெரிவித்துள்ளது. ஆனால் குறித்த காஸ் நிறுவனம் அமைச்சின் கீழ் உள்ள விடயமாக இருக்கும் போது ஏன் நீதிமன்றுக்குச் செல்ல வேண்டும். அரசால் நடவடிக்கை எடுக்க முடியாதா? ஊழலை மறைப்பதற்காகவே வழக்கு விடயத்தை இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். சந்தையில் 12.5 சிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இதனால் புதிய சிலிண்டரைக் கொள்வனவு செய்யும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் புதிய எரிவாயு சிலிண்டருக்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதி வழங்கியதா? நாடு பூராகவும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் அரசின் நடவடிக்கை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும்- என்றார். (ஒ.4)



# பெண் ஊடகவியலாளர்களுக்கு பாலியல் ரீதியாக தொல்லை

## விசாரணை அவசியமென வலியுறுத்து

கொழும்பு.ஜூன் 24

பெண் ஊடகவியலாளர்கள் மீதான பாலியல் ரீதியான தொல்லைகள் தொடர்பில் விசாரணைசெய்வதற்கு, ஊடக நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கையிலுள்ள வெளிநாட்டு செய்தியாளர்கள் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்களுடனான தமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் நோக்கில் இலங்கையிலுள்ள வெளிநாட்டு செய்தியாளர்கள் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெண் ஊடகவியலாளர்கள் மீதான பாலியல் தொல்லைகள் தொடர்பில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கும், இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை ஊடக நிறுவனங்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும். எம்முடன் பணிபுரியும் சக ஊழியர்கள் பாதுகாப்பாகவும், சமத்துவமாகவும் உணரக்கூடிய வகையில் தொழில்புரியும் இடங்களை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது- என்றுள்ளது. (ஒ.4)

# அதிக விலையில் பொருள்கள் விற்பனை வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்கு

மன்னார்,ஜூன் 24

தலைமன்னார் பகுதியில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த மூன்று வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. தலைமன்னார் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைகளை மீறி அதிக விலைக்கு பொருள்கள் விற்கப்படுகின்றன என்று பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கு அமைய மன்னார் மாவட்டச் செயலரின் பணிப்பில் நேற்றுமுன்தினம் மன்னார் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் தலைமன்னார் பியர், மற்றும் ஸ்டேஷன் போன்ற பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களுக்கு திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்த மூன்று வியாபார நிலையங்கள் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டதுடன், ஏனைய வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ஐ-213)

# புதிய தலைவருக்கு வேதனம் அதிகரிப்பு

கொழும்பு.ஜூன் 24

இலங்கையில் போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணைக்காக, அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தின் புதிய தலைவருக்கு வேதனம் அதிகரிக்கப்படவுள்ளது.

அலுவலகத்தின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களின் வேதனம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் திட்டத்துக்கு பொது நிதிக்கான நாடாளுமன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த குழுக் கூட்டத்தில் இந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. எனினும் தற்போது அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியர்ஷன யாப்பா தலைமையில் பொது நிதி தொடர்பான குழு கூடிய போது, இந்த வேதன அதிகரிப்பு முடிவு எடுக்கப்பட்டது. இதே வேளை முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்ரமரத்ன, அண்மையில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த நியமனத்தை ஆட்சேபித்துள்ள இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் முன்னாள் உறுப்பினர் யஸ்மின் சூகா, இந்த அலுவலகத்துக்கான ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிதியை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார். (ஒ.4)




# பேர்ள் கப்பலால் ஏற்பட்ட அழிவு: ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

கொழும்பு.ஜூன் 24

கொழும்பு துறைமுகத்துக்கு அண்மையில் தீப்பற்றிய எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட அழிவுகளைச் சீர்செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 2 லட்சம் யூரோ நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கை ரூபாவில் சுமார் 48 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய இந்த நிதியுதவியின் மூலம், கப்பல் தீப்பரவலால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை புத்தளம் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் பேர் பயனடைவர் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மீனவர்கள் உள்ளடங்கலாக இந்த அனர்த்தத்தால் பாதிப்படைந்த தரப்பினருக்கு அவசியமான உதவிகளை வழங்கி வரும் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இந்த நிதியுதவி வெகுவான பங்களிப்பை வழங்கும். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலைத் தொடர்ந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டமையால், தமது வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கு இது உதவியாக அமையும்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியுதவி வழங்கப்படும். அதேவேளை, கப்பலின் பாகங்கள் மற்றும் அதில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் என்பவை தொடர்ந்து கரையொதுங்கிவரும் நிலையில், அவற்றைச் சுத்தம்செய்வதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும்.

இதனூடாக கரையோரப்பிரதேசத்தை சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தன்னார்வலர்களுக்கு அவசியமான பாதுகாப்பு அங்கிகளையும், உபரணங்களையும் பெற்றுக் கொடுக்க முடியும். கப்பல் அனர்த்தத்தால் வாழ்வாதாரங்களை இழந்த குடும்பங்களுக்கான நிதியனுசரணைகளை வழங்கும் போது பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையோர் உள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பெருமளவான இரசாயனப்பொருள்கள் மற்றும் பிளாஸ்டிக் பதார்த்தங்களை ஏற்றிவந்த எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடந்த மாதம் 20 ஆம் திகதி கொழும்புத்துறைமுகத்துக்கு அண்மையில் தீப்பிடித்தது.

அதன் விளைவாக மிகமோசமான கடற்சூழல் அழிவு என்று கருதத்தக்க அனர்த்தத்தை தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனாக் காலத்துக்கு ரூ.200 பில்லியன் ஒதுக்கீடு

**கொழும்பு,ஜூன் 24**
**இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட சில திட்டங்களுக்கு 200 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கான குறைநிரப்பு மதிப்பீட்டுப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**



நிதியமைச்சு இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளது. கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் கொரோனாக் காலத்தில் வருமானம் இழந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு செலுத்துதல் உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்கும் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கே இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



## தாழ்நிலத்தில் உறங்கிய முச்சக்கரவண்டி


வவுனியா, ஜூன் 24
வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்றுமதியம் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கரவண்டி ஒன்று பலத்த சேதமடைந்தது.
எனினும், அதில் பயணித்த இளைஞர்கள் எதுவித காயமுமின்றித் தப்பினர்.
வவுனியா நகரப்பகுதியில் இருந்து பெரியார் குளம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி பூந்தோட்டம் ஆறுமுகநாவலர் சிலை அருகில் சென்றுகொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கரையில் தாழ்வான பகுதியில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.
அதன்போது முச்சக்கரவண்டி கடும் சேதத்துக்கு உள்ளானது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-110)



## கால்நடை திருட்டு நீர்வேலியில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
நீர்வேலி தெற்கு பகுதியில் அண்மைக்காலமாக கால்நடைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த வாரத்தில் மட்டும் குறித்த பகுதியில் இரண்டு பசு மாடுகள் திருட்டுப்போயுள்ளன. மேய்ச்சலுக்காக விவசாய நிலங்களில் கட்டப்படும் மாடுகளே இவ்வாறு களவாடப்படுகின்றன.
இதேசமயம் கோப்பாய் வடக்கு தரவை வயல் நிலங்களிலும் மேய்ச்சலுக்காக கட்டப்படும் கால்நடைகளும் திருடப்பட்டு வருகின்றன என கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.
இந்தத் திருட்டு சம்பவத்தை அடுத்து கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கு காவல் கடமைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ஜ-17)

# ஓட்டோ கட்டணம் மீற்றருக்கு 50 ரூபா



கொழும்பு,ஜூன் 24
எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், ஒரு கிலோ மீற்றருக்கு 50 ரூபா கட்டணம் அறவிடப்படும் என்று இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகளின் சங்கம் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் தில்ருக் தெரிவித்துள்ளார்.
கொரோனாத் தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு திடீரென அதிகரிக்கப்பட்ட எரிபொருள் விலையைத் தாங்கிக் கொள்ள முடியாது.
முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு இதுவரையில் தற்போதைய அரசால் எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை. வேறு வழியில்லாத காரணத்தாலேயே இந்தக் கட்டணத்தை அதிகரிக்க நேரிட்டுள்ளது.
10 வருடங்களாக ஒரு கிலோ மீற்றருக்கு 40 தொடக்கம் 45 ரூபாவே கட்டணமாக அறவிடப்பட்டது. எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வேறு பல சிக்கல்களும் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)




## கோர விபத்து ஒரே குடும்பத்தில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 24
கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தொன்றில், இலங்கையைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.
கனடா மில்டன், பிரேடானியா வீதியில் விபத்து நடந்துள்ளது. விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.
இரண்டு வாகனங்கள் மோதிக்கொண்ட விபத்தில், கணவர் மற்றும் அவரது மனைவி, மகள் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.
விபத்துக்குக் காரணமான 28 வயதுடைய கனடா இளைஞன் காயமடைந்துள்ளார்.
உயிரிழந்த அத்துல கருணானந்த குடும்பம் நாவல ராஜகிரியவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

## 500 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

மன்னார்,ஜூன் 24
மன்னார் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு நேற்று சுமார் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கோரிக்கைக்கு அமைவாக ஆஹாஸ் கிரீன் எனர்ஜி அமைப்பின் ஊடாக குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்,நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் டானியல் வசந்த மற்றும் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு உலர் உணவு பொதிகளை வழங்கினர். (ஜ-56)



# கனகன்புளியடி– புலோலி வீதியின் சீரமைப்பு ஆரம்பம்

சாவகச்சேரியிலிருந்து கனகன்புளியடிச் சந்தி, சரசாலை ஊடாக வடமராட்சி புலோலி வரையிலான வீதி தார்க்கலவை வீதியாக மாற்றுவதற்கான வேலை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
முதல் கட்டமாக சாவகச்சேரி அஞ்சலக வீதிச் சந்தியிலிருந்து வீதியின் இருமருங்கங்களிலும் வெள்ள நீர் வழிந்தோடும் வகையில் வடிகால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வீதியில் காணப்பட்ட வெள்ளநீர் வழிந்தோடும் மதகுகள் சீரமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுமார் 22 கிலோமீற்றர் நீளமான இந்த வீதி ஐந்து கட்டங்களாக சீரமைக்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறல்கள்

## இணைக்குழு நாடுகள் தெரிவிப்பு

**கொழும்பு,ஜூன் 24**

**இலங்கையில் தொடர்ச்சியாக மீறப்படும் மனித உரிமைகள் தொடர்பில், இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைத்திருந்த இணைக்குழு நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.**

இது தொடர்பில் இணைக்குழுவால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்துக்கு அமைவாக இணங்காணப்பட்ட மனித உரிமை விவகாரங்க ளில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் பதிவாகவில்லை.

மனித் உரிமைகள் பாதுகாப்பு குறிப்பாக சிறுபான்மை மதத்தவர்களின் மனித உரிமை விவகாரங்களில் அரசு உரிய முனைப்பு காண்பிக்கத் தவறியுள்ளது. குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், ஆசிரியர் அனாப் ஜாசீம் ஆகியோர் குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறுபான்மை சமூக அரசியல் தலைவர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் நேரிடும் இறப்புக்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையை வரவேற்கின்றோம். 46/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (ஒ-4)

# கொக்கிளாயில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்

## மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு,ஜூன் 24

இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கொக்கிளாய் கிழக்கில் கனிய மணல் (இல்மனைட் ) தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் 44 ஏக்கர் காணிகளை அரசவளங்கள் மற்றும் தொழில் முயற்சி அமைச்சின் கீழான, இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் கம்பிகளாலான வேலி அமைத்து ஆக்கிரமித்துள்ளது.

குறித்த காணிகள் தொடர்பில், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கொக்கிளாய்ப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் நேரில் சென்று ஆராய்ந்து கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொக்கிளாய் கிழக்குப் பகுதியிலுள்ள எமது தமிழர்களுடைய பூர்வீக காணிகளை இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் அபகரித்துள்ளது. ஏற்கனவே கடந்த இரண்டுவருடங்களுக்கு முன்பாக கொக்கிளாய் உள்ளிட்ட பகுதிகளில் கனியமணல் அகழ்வதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெறுகின்றன என அப்பகுதியிலுள்ள தமிழ் மக்களால் எமக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இவை மக்களுடைய காணிகள், எனவே மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் நாம் கருத்துக்களைத் தெரிவித்துவந்த நிலையில் கிடப்பில் போடப்பட்டிருந்த காணி அபகரிப்பு விடயம் மற்றும் கனியமணல் அகழ்வுக்கான செயற்பாடுகள் என்பவை தற்போது மீண்டும் முனைப்பு பெறத் தொடங்கியுள்ளன.

எனவே கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் தாம் அபகரித்துள்ள இந்தக்காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும்- என்றார்.(ஐ-246)

# பயங்கரவாதிகளுக்கு எதிர்க்கட்சி துணை?

## அமைச்சர் ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டு



கொழும்பு,ஜூன் 24


பயங்கரவாதிகளைக் காப்பாற்றும் நடவடிக்கையை எதிர்க்கட்சி உறுப்பினர் ரவூப் ஹக்கீம் முன்னெடுத்து வருகின்றார். முற்றுமுழுதாக பயங்கரவாதிக்குத் துணைபோகும் போக்கிலேயே அவர் செயற்படுகின்றார்.

இவ்வாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் குற்றம் சுமத்தினார். நாடாளுமன்றில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில், அமைச்சர் நாமல் ராஜபக்ச அமைச்சரவை அறிவிப்பொன்றை முன்வைத்தார். அங்கு உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் ரவூப் ஹக்கீம், சிறைச்சாலைக்குள் இருக்கும் நபர்கள் குறித்து ஒரு பக்கம் பேசினாலும், அதற்கு வெளியில் குற்றச்சாட்டில் சிலர் கைதுசெய்யப்படுகின்றனர். அப்பாவிகள் சிலர் கைதுசெய்யப்படுகின்றனர்.

உதாரணமாக ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் போன்றவர்கள் நீண்டகாலமாக பிணை வழங்காது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார். இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளைத் தண்டிக்க அரசு. நடவடிக்கை எடுக்க மறுக்கின்றது என்பதையே எதிர்க்கட்சி உறுப்பினர் ஹக்கீம் எப்போதும் கூறுவார். ஆனால் நாம் ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்க்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளோம். தவறு செய்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தவுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தித் தண்டிக்கிறோம் என்று குற்றம் சுமத்துகின்றீர்கள். கர்தினாலிடம் சென்று வேறு ஒன்றைக் கூறுகின்றீர்கள்.

குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்தவுடன் பயங்கரவாதிகளுக்காக நியாயம் பேசுகின்றீர்கள். எதிர்கட்சியினரும், ஹக்கீமும் பயங்கரவாதிகளுக்கு துணை நிற்கின்றனர். ரவூப் ஹக்கீம் மூலமாக அது தெளிவாக வெளிப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் இதனை ஏற்றுக்கொள்கின்றாரா? பயங்கரவாதிகளுக்கு ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கற்பித்துள்ளார். அவருக்கான நீங்கள் துணை நிற்பது நியாயமா என்றார். இதற்குப் பதிலளித்த ஹக்கீம், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆவேசமாகப் பேசுகின்றார்.

ஆனால் ஹிஸ்புல்லா அப்பாவிச் சட்டத்தரணி. சட்டமா அதிபர் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரியும் கூட. ஈஸ்டர் தாக்குதலை சாட்டாக வைத்துக்கொண்டு பெரும் சூழ்ச்சி ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது என்று முன்னாள் சட்டமா அதிபரும் கூறியுள்ளார். ஆகவே இவற்றை ஆராய்ந்து பாருங்கள் - என்றார். (4)



கொடிகாமம் ஏ9 வீதியுடன் இணைந்த நிலையில் அமைந்திருந்த பஸ் நிலையப் பகுதி தற்போது வளைவுடன் கூடிய பாதசாரிகள் நடைபாதையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகளுக்கான வாகனத் தரிப்பிடம் பழைய தரிப்பிடத்திலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (ப-159,9,131)

# உய்குர் முஸ்லிம் விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக இலங்கை

கொழும்பு,ஜூன் 24

சீனாவில் சிறுபான்மை உய்குர் முஸ்லிம் சமூகம் துன்புறுத்தப்படுகின்றனர் என்று ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில், இலங்கை, சீனாவுக்கு ஆதரவாகக் கருத்துரைத்துள்ளது.

ஷின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பிராந்தியத்துக்கு ஒரு அர்த்தமுள்ள அணுகுமுறை அவசியம் என்று ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் தெரிவித்திருந்தார். இந்த ஆண்டு சீனாவுக்கு செல்லவும் திட்டமிட்டுள்ளார். ஷின்ஜியாங் பகுதி உள்ளிட்ட சில இடங்களுக்குச் செல்வதற்கான நிபந்தனைகளை சீனா ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் நாடு களின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கான மரியாதை சர்வதேச உறவுகளின் ஒரு பகுதியாகும் என்று இலங்கை தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில், ஹொங்கொங், ஷின்ஜியாங் மற்றும் திபெத் ஆகியவை சீனாவின் உள் விவகாரங்களாகும். எனவே அதில் வெளிக்கட்சிகள் தலையிடக்கூடாது என்று இலங்கை தெரிவித்துள்ளது.

பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை மேம்படுத்துதல், சமூக ஸ்திரத்தன்மையை பேணுதல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மற்றும் அபிவிருத்தி உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு சீனாவின் முயற்சிகளை பாராட்டுகின்றோம் என்று இலங்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளது. இதேவேளை உய்குர் பிரதேசம் முகாம்களில் கைதிகளின் தன்னிச்சையான தடுப்புக் காவல், கட்டாய உழைப்பு மற்றும் சித்திரவதை, கட்டாய கருத்தடை உள்ளிட்ட மனித உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சுற்றிவளைக்கும் ஆபத்துகள்

கொரோனாப் பெருந்தொற்றால் ஏற்கனவே இலங்கை மக்கள் பாதிப்படைந்துள்ள நிலையில் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக, எதிர்பாராத சில நிகழ்வுகளும் மக்களைச் சுற்றிவளைத்துத் தாக்கத் தொடங்கி யுள்ளன. குறிப்பாக எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் தீ விபத்தால் இலங்கைக் கடற்பிராந்தியத்தில் உண்டான மாறுதல்களின் விளைவுகளை நாடு அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறது. முதலில் விபத்து நடந்த இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் அவதானிக்கப்பட்ட கடல் மாசடைவின் விளைவுகளை இப்போது, நாட்டின் சகல பகுதிகளிலும் உணரக் கூடியதாக இருக்கிறது. டொல்பின்களும், கடல் ஆமைகளும், திமிங்கிலங்களும், சுறாக்களும் இறந்த நிலையில் கரையொதுங்கத் தொடங்கியுள்ளன.

இப்படி கரையொதுங்கும் ஆழ்கடல்வாழ் உயிரிகளின் உடல்கள் பாரதூரமான செய்தியொன்றைச் சொல்லி நிற்கின்றன. அந்தக் கடல் உயிரிகள் தாமாகத் தற்கொலை செய்து தங்களை மாய்த்துக்கொள்ளவில்லை. அவற்றின் வாழிடங்களில் நிகழ்ந்த இரசாயன மாசடைவே இந்தச் சாவுகளுக்கு முழுக்காரணம். கப்பலின் தீ விபத்தால் உண்டான கடலில் கலந்த இரசாயனப் பொருள்கள், ஆழ்கடல் உயிரிகளையே இவ்வளவு தாக்கியிருக்கின்றதென்றால், ஏனைய உயிரிகளை எந்தளவு தூரம் தாக்கியிருக்கும், அவற்றின் வாழ்வியலை புரட்டிப் போட்டிருக்கும் என்பதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நீர்கொழும்பு கடற்பரப்பை அண்டிய பகுதிகளில் அண்மைக்காலமாக பிடிபடும் மீன்களின் உடல்களில் இரசாயனப் படிவுகள் தென்படுகின்றன என்று சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அதனால் அந்தப் பிராந்தியத்தில் மீன்பிடி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேநிலைமை, மெல்ல மெல்ல வடக்கு நோக்கியும் நகரத் தொடங்கியுள்ளது. அண்மைக்காலமாக வடக்கு கடற்பகுதி யில் இறந்த நிலையில் ஆழ்கடல்வாழ் உயிரினங்கள் கரையொதுங்கியமையால், தீ விபத்தால் உண்டான இரசாயனத் தாக்கம் இங்கும் பரவியிருக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் கடலுணவுகளை வாங்கப் பின்னடிக்கின்றனர். அவற்றை உட்கொண்டால் தமது உயிருக்கும் ஆபத்து என்ற அச்சத்தின் விளைவே இவ்வாறு கடலுணவுகளை மக்கள் சடுதியாகத் தவிர்ப்பதற்கு காரணம். இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமே ஊசாலடிக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே பயணத் தடை காரணமாக அவர்கள் கடற்றொழிலுக்கு சீராகச் சென்றுவரும் சூழல் இருக்கவில்லை. போதாக்குறைக்கு மாகாணங்களுக்கிடையே விதிக்கப்பட்ட பயணத்தடையால், வெளி மாகாணங்களுக்கு கடலுணவுகளை முன்னரைப் போல ஏற்றுமதி செய்யவும் வசதியில்லை. இதனால் ஏற்கனவே நொந்து நூலாகி இருந்த மீனவர்கள், பயணத்தடை விலக்கப்படும் நாள்களிலாவது அதிகளவான மீன்களைப் பிடித்து, 'விட்டதைப் பிடிக்கும்' எண்ணத்துடன் தொழிலில் குதித்தனர். ஆனால், எதிர்பாராதவிதமாக எங்கேயோ நடந்த ஒரு தீ விபத்து அவர்களின் எண்ணத்தில் மண் அள்ளிப் போட்டுள்ளது.

தனியே கடற்றொழில் மாத்திரமன்றி, உப்பு உற்பத்தியும் புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடுவதுடன், நாட்டின் பல பகுதிகளில் செயற்கையாக உப்புக்குத் தட்டுப்பாடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேர்ள் கப்பலில் இருந்த இரசாயனப் பதார்த்தங்களும், எண்ணெய்க் கழிவுகளும் கடலை நாசப்படுத்தியதை இலங்கை அரசாங்கம் வழமை போல மறுதலிக்கின்றது. அதிலும் கப்பலில் இருந்த இரசாயனப் பதார்த்தங்களின் அளவை வெளிப்படுத்த அரசாங்கம் தயங்குகின்றது. அத்தோடு கப்பலின் தாங்கியில் இருந்த எண்ணெய் கடலில் கலக்கவில்லை எனவும் அரச தரப்பு அடித்துச் சத்தியம் செய்கின்றது. ஆனால் எண்ணெய், கப்பலைச் சூழவுள்ள பகுதிகளில் மிக நீண்ட தொலைவுக்கு மிதந்து கொண்டிருப்பதை செய்மதிப் படங்கள் காட்டிக் கொடுத்துள்ளன. நடந்தது நடந்துவிட்டது, தீ விபத்தைத் தான் தவிர்க்க முடியவில்லை, ஆனால் அதனால் உண்டாகும் பின்விளைவுகள் குறித்த சரியான தகவல்களை விஞ்ஞானபூர்வமான முடிவுகளோடு வெளியிட்டால், மக்களைக் காக்க முடியுமல்லவா? ஆனால் அதற்கு அரசாங்கம் தயாராயில்லை. நாடும், நாட்டு மக்களும் நாசமாகப் போனாலும் தமக்கு கௌரவமே முக்கியம் என்ற மனோநிலையில், கப்பல் விபத்தால் இலங்கைக் கடற்பரப்பில் உண்டான பாதிப்புக்கள் குறித்து பொய்யான தரவுகளை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கும், இந்த அரசாங்கத்தைப் பெற என்ன தவம் செய்தோம்? யாமறியோம் பராபரமே!




# அதிகாரங்களை பணயம்வைக்க முயல்கின்றார் சுகாதார அமைச்சர்

## ரெலோ கண்டனம்

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**சுகாதார அமைச்சர் மாகாணசபை மருத்துவமனைகளை மத்திய அரசு கையகப்படுத்தினால் மாத்திரமே நிதி வழங்குவோம் என்ற மிரட்டல் மூலம் மாகாணசபை அதிகாரங்களைப் பணயம்வைக்க முயல்கின்றார். இது ஒரு அரசியல் குற்றம் என்பதை அவர் உணரத் தவறியிருக்கிறார் என்று ரெலோ அமைப்பு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது;

மாகாண சபை மருத்துவனைகளைக் கையகப்படுத்தமாட்டோம். ஆனால் நிதியையும் ஒதுக்கமாட்டோம் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நாடாளுமன்றில் தெரிவித்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

அமைச்சரின் கூற்று தற்போது அரசின் சர்வாதிகாரப்போக்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அரசியல் சாசனத்தின் ஊடாகவும் மாகாணசபை சட்டத்தின் மூலமாகவும் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் மாகாணசபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட மருத்துவமனைகள், மத்திய அரசால் கையகப்படுத்துவது அரசியல் யாப்பை மீறும் செயலாகும். மாகாணசபையின் ஒப்புதலுடன்தான் இதை நடைமுறைப்படுத்த முடியும். மாறாக மாகாணசபைகள் இயங்குநிலையில் இல்லாத சூழலில் கையகப்படுத்துவது தவறானதாகும். மாகாண சபைகளுக்கு வழங்கப்பட் அதிகாரங்கள் மக்களின் உரிமை என்பதையும், மத்திய அரசின் திறைசேரி நிதியும் மக்கள் வரிப் பணத்தில் பெறப்பட்டதால் மக்களுக்கே உரித்தானது என்பதையும் அமைச்சர் மறந்துவிட்டார். ஆகவே நிதி ஒதுக்கீடு என்பது பயனாளிகளின் நலன்கருதி இருக்க வேண்டுமே தவிர, அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மிரட்டுகின்ற அல்லது பணயம் வைக்க கையாள்வது அரசியல் குற்றம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது. (ப)

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

# இரண்டாம் கட்டத் தடுப்பூசி எதிர்வரும் திங்கட்கிழமை

சாவகச்சேரி,ஜூன் 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஐந்து நாள்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



மாவட்டத்தில் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகள் மற்றும் மருத்துவ மனைகள் போன்ற இடங்களில் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக 50 ஆயிரம் பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றியவர்கள் இரண்டாம் கட்ட தடுப்பூசியையும் அதே நிலையங்களில் ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தென்மராட்சி பிரதேசத்தில் கிராம அலுவலர் ரீதியாக பொதுமக்களுக்கு அறிவித்து வருகின்றனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் பிரதேசத்தில் 6 ஆயிரத்து 55 பேருக்கு முதலாம் கட்ட தடுப்பூசியை ஏற்றியுள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றால் 10 கர்ப்பிணிகள் உயிரிழப்பு



கொழும்பு,ஜூன் 24

**இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 10 கர்ப்பிணிகள் உயிரிழந்துள்ளனர் என்று மகப்பேறியல் மற்றும் பெண்ணோயியல் விசேட வைத்திய நிபுணர்கள் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவுக்கு அமைவாக, கர்ப்பிணிகளுக்கும் தடுப்பூசி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தத் திட்டத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும்.

அதற்கான அனைத்து வசதிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இதனை செயற்படுத்தவில்லை என்றால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்று நிறுவனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார். (ஒ-4)



# 'அசிரிமத் மாதாவக்' நூல் பிரதமரிடம் கையளிப்பு

கொழும்பு,ஜூன் 24

விஷ்வ கீர்த்தி என்ஸ்லி எட்வட் அமரசிங்கவால் எழுதப்பட்ட 'அசிரிமத் மாதாவக்' என்ற நூல் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

திருமண வாழ்வில் இணைய எதிர்பார்த்திருக்கும் மகள்கள் மற்றும் தாய்மையடையும் கனவுடன் இருக்கும் மகள்களுக்கும் ஒரு தர்மத்துடனான தார்மீக வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான பல குறிப்புகள் இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



குறிஞ்சாக்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கர்ப்பிணித் தாய்மாருக்கான கொரோனாத் தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

குறிஞ்சாக்கேணி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி, மருத்துவர் ஏ.எம்.எம்.அஜீத் தலைமையில் கச்சக்கொடி தாதீவு பிரதேச மருத்துவமனை மற்றும் முனைச்சேனை கிராமோதய நிலையம் ஆகியவற்றில் இந்த நடவடிக்கை இடம்பெற்றது. சைனோஃபார்ம் தடுப்பூசி அவர்களுக்கு ஏற்றப்பட்டது. (ப)

# அவசரமாக முடிவுறுகின்றன கூட்டங்கள்

சாவகச்சேரி, ஜூன் 24

பயணத்தடை காரணமாக ஒரு மாதமாக அலுவலகங்கள் செயற்படாத நிலையில், உள்ளூராட்சி சபைகள் ஜூன் மாதத்துக்குரிய கூட்டங்களை அவசரமாக ஒரு மணி நேரத்தில் நடத்தி முடிக்கின்றதைக் காணமுடிகின்றது.

கூட்டங்கள் சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெற்று, சுகாதார விதிமுறைகளை அனுசரித்து, நிகழ்ச்சி நிரல் இன்றி, ஓரிரு விடயங்களை மட்டும் கலந்துரையாடி முடிவுறுத்துப்படுகின்றன. குறிப்பாக கொடுப்பனவுகளை வழங்க அங்கீகாரம் பெறப்படுவதுடன் கூட்டங்கள் நிறைவுசெய்யப்படுகின்றன.

மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். கூட்டங்கள் நடத்த சுகாதாரத் திணைக்களத்தினர் தடை செய்துள்ள நிலையில், சமூக இடைவெளிகளில் ஆசனங்கள் வைக்கப்பட்டு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. (ப-9)

# ரணிலின் அரசியலால் ஐ.தே.க. பின்னடைவு

## சஜித் அணி சாட்டையடி



கொழும்பு,ஜூன் 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையேற்று ரணில் விக்கிரமசிங்க 27 ஆண்டுகள் அரசியல் புரட்சி செய்தார். அதன் விளைவால் கட்சி இன்று பூஜ்ஜிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஒரு ஆசனத்தை வைத்துக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க, அரசியலில் புரட்சியை ஏற்படுத்துவார் என்று விடுக்கப்படும் அறிவிப்புகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவால் இன்னும் ஒரு தடவை கூட ஜனாதிபதியாக முடியவில்லை. பலமான எதிரணியையும் அவர் கட்டியெழுப்பவில்லை. எதிரணிக்குரிய பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தியே இனி நிறைவேற்றும்.

ரணில் 27 வருடங்கள் புரட்சி செய்தார் தான். ஆனால் கட்சி பூஜ்ஜிய நிலைக்கு இன்று வந்துள்ளது. மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். அதனால் தான் நாம் ஐக்கிய மக்கள் சக்தியாகச் செயற்படுகின்றோம்.

ரணில் மீது மதிப்பு உள்ளது. ஆனால் அரசியல் ரீதியில், கொள்கை ரீதியில் முரண்பாடு உள்ளது - என்றார்.

அதேவேளை, அரசுடன் 'டீல்' வைத்துக்கொள்ளாமல் எதிரணியாக சஜித்தின் தலைமைத்துவத்தின் கீழ் பயணிக்க ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர். (ஒ.4,44)

# விலங்குகளுக்கு உணவான 88, 615 மெற்றிக்தொன் நெல்

## 2.48 பில்லியன் ரூபா நஷ்டம்

கொழும்பு,ஜூன் 24

கடந்த அரசில் 88 ஆயிரத்து 615 மெற்றிக்தொன் நெல் விலங்குகளுக்கு உணவாக, குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டது. அதனால் 2.48 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான வினாவின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கே.பி. குமாரசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த அரசில் நல்ல நிலையில் வைக்கப்பட்டிருந்த நெல் விலங்குகளின் தீவனமாக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஒப்புதல் இல்லாமல் 88 ஆயிரத்து 615 மெற்றிக்தொன் நெல் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் 2.48 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. இதற்கு அப்போதைய அமைச்சர் உள்ளிட்ட அரசு தான் பொறுப்பு. இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (ஒ-4)

# மீண்டும் யாழ். போதனாவுக்கு மருத்துவர் இளஞ்செழிய பல்லவன்

யாழ்ப்பாணம்,ஜூன் 24

பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் இளஞ்செழிய பல்லவன் மீண்டும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் மாற்றப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கொழும்பு மருத்துவமனையில் பணியாற்றிய நிலையில், தற்போது யாழ்.போதனாவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றியபோது கிளிநொச்சி பகுதியில் நடைபெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட நபருக்கு பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை மூலம் கை வெற்றிகரமாக பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் கற்கை யாழ். பல்கலையிலும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தில் 2019/2020 ஆம் கல்வியாண்டில் சுற்றுலாத்துறையும், விருந்தோம்பலும் கற்கைநெறிக்கு முதன்முதலாக மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.**

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட வியாபார நிர்வாகமாணி மற்றும் வணிக மாணி கற்கைநெறிகளின் புதுமுக மாணவர்களுடன் சுற்றுலாத்துறையும், விருந்தோம்பலும் கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி, திங்கட்கிழமை இணைய வழி வாயிலாக நிகழ் நிலையில் இடம்பெறவுள்ளது.

2019/2020 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டு பதிவு செய்த மாணவர்கள் www.maco.jfn.ac.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக மேலதிக விவரங்களைப்பெற்றுக் கொள்ளலாம் என வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (ப)



# தென்கிழக்கு பல்கலைக்கு உப வேந்தரானார் அபூபக்கர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தராக அந்தப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வரும் ஓகஸ்ட், 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு மேற்பட்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் அப்பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவர் உபவேந்தராக நியமிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரபீடத்தில் சமூகவியல் முதற்தொகுதி மாணவராக கல்வி கற்று, அப்பீடத்தின் பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு, முதல் சமூகவியல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றவர். பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் இலங்கை பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் இள வயதில் உப வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)



# நான்கு மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை

முல்லைத்தீவு,ஜூன் 24

வெல்லும் தலைமுறை செயற்றிட்டத்தின் கீழ் நான்கு மாணவர்களுக்கு 4 மாதங்களுக்கான ஊக்குவிப்புத் தொகை கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

குறித்த ஊக்குவிப்புத்தொகையை வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் , அவரது மக்கள் தொடர்பகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் மற்றும் கல்வியியல் கல்லூரியில் பயிலும் மாணவர் ஒருவர் ஆகியோருக்கே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. குறித்த ஊக்குவிப்புத் தொகையை புலம் பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் திருவிணையர் சுரேஷ் மற்றும் அருண்யா ஆகியோர் பொறுப்பேற்று வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-246)

# யோகா போட்டிப் பரீட்சையில் வென்ற மாணவர்களுக்கு பரிசு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இணையவழி மூலம் நடத்தப்பட்ட யோகா போட்டிப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் மூன்று நிலைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சங்கர் பாலச்சந்திரன், வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர், வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களின் அதிபர்கள், மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கான இசைக் கருவிகளும் வழங்கப்பட்டன. குறித்த இசைக்கருவியை அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் பெற்றுக்கொண்டார். (ப-113)





# உதவி வழங்கல்

முல்லைத்தீவு, ஜூன் 24

வன்னி தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு, தம்பனை கிராமத்தைச் சேர்ந்த 36 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. வன்னி தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க வன்னி மண் நற்பணி மன்றத்தின் நிதியுதவியு டன் கொரோனாத் தொற்று நோய் காரணமாக தினக் கூலி செய்யும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே இவ்வாறு

உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. நிறுவனத் தலைவர் மற்றும் ஊடகவியலாளர்கள் இந்தப் பொருள்களை வழங்கினர். (ப)

# சினிமா பாணியிலேயே சுட்டார் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்

## உயிரிழந்தவரின் நண்பர் தகவல்



யாழ்ப்பாணம், ஜூன் 24

"நான் யார் எனத் தெரியுமா "பொலிஸ்" எனக் கூறி எனது நண்பரின் கழுத்தில் பிடித்த மெய்ப்பாதுகாவலர், தனது துப்பாக்கியை எடுத்து மிரட்டியபோது அது வெடித்தது இதனால் எனது நண்பன் உயிரிழந்தான்" என்று, உயிரிழந்தவரின் நண்பர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்பாதுகாவலரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, மகாலிங்கம் பாலசுந்தரம் என்பவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இது தொடர்பாக சம்பவத்தை நேரில் பார்த்த, உயிரிழந்தவரின் நண்பர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், நானும் நண்பன் பாலசுந்தரமும் சம்பவ தினமன்று அமைச்சரின் வீடு அமைந்துள்ள வீதியிலுள்ள வீடு ஒன்றில் மண் கொடுப்பது தொடர்பாக பேச முச்சக்கரவண்டியில் சென்றோம். திரும்பிவரும் போது அமைச்சரின் வீட்டின் முன்பகுதியிலுள்ள வெற்றுக்காணியிலுள்ள மரம் ஒன்றில் குறித்த மெய்பாதுகாவலர் நின்றிருந்தார். இதன்போது அவரைக் கண்டு முச்சக்கர வண்டியை நிறுத்துமாறு எனது நண்பன் கோரினான். நான் நிறுத்தாமல் சென்றேன். இருந்தபோதும் நண்பன் அவர் கூப்பிடுகின்றார் கதைத்துவிட்டுப் போவோம் என்றார். அதனையடுத்து நான் முச்சக்கரவண்டியைத் திருப்பிக்கொண்டு அமைச்சின் வீட்டின் முன்னால் வீதியில் நிறுத்தினேன். வீதிக்கு வந்த மெய்பாதுகாவலர் நண்பனிடம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். பின்னர் மெய்ப்பாதுகாவலர் நண்பனின் கழுத்தில் பிடித்து, நான் யார் தெரியுமா பொலிஸ் என்று கூறியவாறே தனது துப்பாக்கியை எடுத்தார். அவனை மிரட்டினார் இதன்போது துப்பாக்கி வெடித்தது. நண்பன் கீழே வீழ்ந்தான். குருதி வெளியே வந்தது. அதன் பின்னர் எனது முச்சக்கர வண்டியில் அவனை நான் மருத்துவமனைக்கு கொண்டுசென்றேன். இதேவேளை நண்பனுக்கும் மெய்ப் பாதுகாவலருக்கும் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் பிரச்சினை ஒன்று இடம்பெற்றிருந்தது. ஆனால் அது பற்றி எனக்கும் தெரியாது"- என்றார். (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மருத்துவமனைகள், பாடசாலைக்கு யாழ். மாநகரசபை உறுப்பினர் உதவி

யாழ்ப்பாணம், ஜுன் 24

இரு மருத்துவமனைகள் மற்றும் பாடசாலை ஒன்று ஆகியவற்றுக்கு யாழ் மாநகரசபை உறுப்பினரும் யாழ் மாவட்ட பூமணி அம்மா அறக்கட்டளையின் தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரனால் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் நோயாளரின் நலனகருதி ஒரு தொகுதி பால்மா பைக்கற்றுகளும், நோயாளர்களுக்கான சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறை அரசினர் மருத்துவமனைக்கும் நோயாளர்களின் நலன் கருதி ரூபா 50 ஆயிரம் பெறுமதியான கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு செட்டித்தெரு மிசன் பாடசாலையில் தரம் 5 மாணவர்களின் நலன்கருதி கல்வி வளர்ச்சிக்காக 25ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டுள்ளது. (ப)



## 433 பேர் கைது

கொழும்பு,ஜுன் 24

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினமும் 433 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை ஆகிய குற்றச் சாட்டுக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஒ.4)




## 25 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு,ஜுன் 24

**இலங்கையில் இதுவரை 24 லட்சத்து 87 ஆயிரத்து 297 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

அதற்கமைவாக 14 லட்சத்து 48 ஆயிரத்து 601 பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும், 4 லட்சத்து 70 ஆயிரத்து 870 பேருக்கு இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கும், 3 லட்சத்து 72 ஆயிரத்து 675 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 454 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-4)

## கடல் அட்டைத் தொழிலால் முல்லை மீனவர்கள் பாதிப்பு

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜுன் 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பகுதியில் அதிகளவான கடல் அட்டை பிடிக்கும் தொழிலாளர்கள் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபடுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட சாலைப்பகுதியில் நூற்றுக்கணக்கான படகுகளை வைத்து கடல் அட்டை பிடிக்கும் நடவடிக்கையில் வெளிமாவட்ட மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். சாலை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்பகுதியில் இவ்வாறு கடல் அட்டை பிடிப்பவர்களின் நடவடிக்கையால் கரையோர கடற்றொழில் செய்யும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுமதியற்றமுறையில் அதிகளவான கடற்தொழிலாளர்கள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனவே முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ப-19)



## இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் 100 ஒட்சிசன் கருவிகள் கையளிப்பு


கொழும்பு,ஜுன் 24

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 100 ஒட்சிசன் கருவிகள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ஜகத் அபேசிங்கவால், பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் ஒட்சிசன் கருவிகள் கையளிக்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக, சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கத்தால் இவை அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நிகழ்வில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ச ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ.4)



## 11 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கம்

கொழும்பு,ஜுன் 24

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 11 கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் நாகராஜ வலவ்வ கிராம சேவகர் பிரிவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறைந்துறைச்சேனை கிராம சேவகர் பிரிவின் முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதிகள், காத்தான்குடி பிரிவு 4, காத்தான்குடி பிரிவு 5 தெற்கு, காத்தான்குடி பிரிவு 6 மேற்கு, புதிய காத்தான்குடி பிரிவு வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கர்பலா வீதி, ஏ.எல்.எஸ். மாவத்தை, நூரானியா பொது மயான வீதி மற்றும் கடற்கரை வீதி ஆகியவையும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## கொரோனாவிலிருந்து குணமடைந்தது சிங்கம்

கொழும்பு,ஜுன் 24

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான சிங்கம் பூரண குணமடைந்துள் ளது என்று அமைச்சர் சீ.பி ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டில் தென்கொரியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 'தோர்' என்ற ஆண் சிங்கமொன்றுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் விலங்கொன்றுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை இதுவே முதன்முறையாகும்.

இதேவேளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிகள் மிருகக் காட்சிசாலையில் உள்ள ஏனைய மிருகங்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன. (ஒ.4)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸமகாரம வாவி துப்புரவு பணியில் சீன இராணுவம்?

கொழும்பு,ஜூன் 24

திஸ்ஸமகாராமய வாவி துப்புரவுத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் வித்தியாசமான ஆடைகள் அணிந்த சிலர் கலந்து கொண்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



சீன மக்கள் விடுதலை இராணுவத்தினர் பயன்படுத்துகின்ற சீருடையுடன் இந்த ஆடைகளை ஒப்பிட்டுக் கூற முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனா மற்றும் இலங்கை ஆகியவை இணைந்த கூட்டு நிறுவன மொன்றிடம் திஸ்ஸமகாராமய வாவி துப்புரவுப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அங்கு சிவில் பணிகளே தற்போது ஆரம்பமாகியுள்ளன.

நிலைமை அவ்வாறிருக்கும் போது, இராணுவச் சீருடையை ஒத்த ஆடைகளை அணிந்து, பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஒ.4)

# வாக்குத் தவறியது ராஜபக்சவின் அரசு

## எதிர்க்கட்சி சாடல்

கொழும்பு,ஜூன் 24

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டாலும், உள்நாட்டில் எரிபொருள்களின் விலையை அதிகரிக்கப் போவதில்லை என்று கூறிய ராஜபக்ச அரசு, தற்போது மக்களை ஏமாற்றியுள்ளது. பலமிக்க ஒருவரைக் கொண்டு எரிபொருள்களின் விலையை மறைமுகமாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்ட விவகாரத்தில்; ஆளுங்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன, அமைச்சர் உதய கம்மன்பிலவை கழுத்தறுப்புச் செய்ய முயற்சிக்கின்றது.

ஆளுங்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குத் தெரியாமலும், ஜனாதிபதி மற்றும் பிரதமர், அமைச்சர்கள் ஆகியோருக்கு அறிவிக்காமலும் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டிருக்குமாக இருந்தால், அவ்வாறான தீர்மானத்தை எடுத்த பலமிக்க அந்த நபர் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும். கடந்த ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் உலக சந்தையில் எரிபொருள் விலை மிகவும் குறைந்திருந்தது. எனினும் உள்நாட்டில் விலை குறைக்கப்பட்டதென்றே அரசு கூறியது. ஆனால் தற்போது வாக்குறுதியை மறந்து செயற்பட்டுள்ளது. என்றார். (ஒ.4)

# 3 போத்தல் கசிப்புடன் இளைஞன் கைது

வவுனியா,ஜூன் 24

உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வவுனியா செட்டிகுளம் கப்பாச்சி பகுதியில் வைத்து குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். குறித்த பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இளைஞரிடம் சோதனை மேற்கொண்டனர்.


இதன்போது குறித்த இளைஞனிடமிருந்து 3 போத்தல் கசிப்பை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதனையடுத்து செட்டிகுளம் பொலிஸாரால் இளைஞன் கைதுசெய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-18)

# தபாலகம் இடமாற்றம்; மக்கள் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு மணவாளபட்டமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கரிப்பட்டமுறிப்பு கிராமத்தில் இயங்கிய உப தபாலகம் இடமாற்ற செய்யப்பட்டதற்கு கிராம பொது அமைப்புகளும், பொது மக்களும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.



"கடந்த 43 ஆண்டுகளாக கரிப்பட்ட முறிப்பு கிராமத்தில் இயங்கிய உப தபாலகம் தற்போது தச்சடம்பன் கிராமத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 43 ஆண்டுகளாக இயங்கிய தபாலகம் ஏன் இடமாற்றம் செய்யப்பட்டது என்பது தொடர்பாக தபாலக உயரதிகாரிகள் மணவாளபட்ட முறிப்பு கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு விளக்கம் அளிப்பதுடன் மீண்டும் கரிப்பட்டமுறிப்பில் தபாலகத்தை இயங்க வைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மக்கள் கோரினர். (ப-13)



# நாடாளுமன்றுக்குள்ளும் சஜித் அணி போராட்டம்!

கொழும்பு,ஜூன் 24

எரிபொருள்களின் விலை உயர்வைக் கண்டித்தும், அதிகரிக்கப்பட்டுள்ள விலையை உடன் குறைக்குமாறு வலியுறுத்தியும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று நாடாளுமன்றுக்குள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

சபாநாயகரின் அறிவிப்பு, ரணில் விக்கிரமசிங்கவின் சத்தியப்பிரமாணம் மற்றும் பொதுமக்களின்அனுஹப்புஆகியவிடயங்கள் நிறைவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது.

இதன்போதே ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், கதிரைகளில் இருந்து எழுந்து பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். எரிபொருள்களின் விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியபடியே சபைக்கு நடுவில் வந்து அமர்ந்து கோஷம் எழுப்பினர்.

இதனால் சபைக்குள் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. சபை நடவடிக்கைகளை சபாநாயகர் தற்காலிகமாக ஒத்திவைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுத்தார். எதிரணியின் போராட்டத்துக்கு மத்தியில் சுகாதார அமைச்சர் உரையாற்றினார். மறுபுறத்தில் எதிரணி உறுப்பினர்களின் போராட்டம் சுமார் 35 நிமிடங்கள் வரை தொடர்ந்தது. தற்போது இன்பமா, எரிபொருள்களின் விலையை உடன் குறைக்கவும் உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையே எதிரணியினர் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை, எரிபொருள்களின் விலை உயர்வைக்கண்டித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கண்டனப் பேரணியை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.4,44)



# அரசியல் பழிவாங்கலுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டம்

## ஹக்கீம் எதிர்ப்பு

கொழும்பு,ஜூன் 24

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசியல் பழிவாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே உடனடியாக அதனை நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்ற அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சட்டம் இரத்துச்செய்யப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதனால் நாட்டுக்குக் கிடைக்கவிருந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இல்லாமல் போயுள்ளது. சி.ஐ.டியின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு எதிராக சாட்சிகள் சோடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஷானியின் பிணை மனு தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பினூடாக, அரசின் கன்னத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அறைந்துள்ளது. என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மயமாக்கலை நோக்கி நகரும் இலங்கை



முதலாவது உரையிலேயே அரசை விளாசினார் ரணில்

கொழும்பு,ஜூன் 24

**மக்கள் வழங்கிய ஆணையை மீறி இராணுவ மயமாக்கலை நோக்கி அரசு பயணித்துக் கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர், நாடாளுமன்றத்தில் ஆற்றிய முதலாவது உரையின் போது அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்த ரணில் விக்கிரமசிங்க, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் செயற்பாட்டு மையம் தோல்வி கண்டுள்ளது எனவும் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செல்வந்தர்களுக்கு வரிச்சலுகைகளையும், சாதாரண மக்களுக்கு பட்டினியையும் வழங்கும் வகையிலேயே அரசின் வரிக்கொள்கை அமைந்துள்ளது. அந்நியச் செலாவணியும் குறை வடைந்துள்ளது. இந்த மாத முடிவில் பல கோடி கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியம் உட்பட இதர நாடுகளில் இருந்து கடன்கள் பெறப்படவுள்ளன. அதற்கான கால எல்லை இன்னும் சரியாகத் தெரியவரவில்லை. இவற்றை வைத்து எவ்வாறு பொருளாதாரத்தை முகாமை செய்வது? பொருளாதாரத்தை மீட்பெடுப்பதற்கான அரசின் திட்டங்கள் எவை என்பது குறித்து தெரியப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதே பொருளாதாரத்தை மீட்பதற்கான ஒரே வழியாக இருக்கும். அவ்வாறு முடியாவிட்டால் மாற்று வழி என்னவென்பது குறித்து அரசு தெளிவுப்படுத்த வேண்டும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு கொவிட் பிரச்சினையும் பிரதான காரணம்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் கொவிட் 19 பரவல் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி தோல்வி கண்டுள்ளது. குறித்த செயலணியை வைத்துக்கொண்டு முன்நோக்கிப் பயணிக்க முடியாது. அரசமைப்பின் பிரகாரம் இதற்கான அதிகாரம் அமைச்சரவைக்கே இருக்க வேண்டும். எனவே, அந்த அதிகாரத்தை அமைச்சரவை ஏன் பயன்படுத்தவில்லை. அரசு பயன்படுத்த வேண்டும். தவறுகள் இடம்பெற்றால் அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கதைக்கலாம். இராணுவத்தளபதி என்பவர் திணைக்களமொன்றின் பிரதானி. அமைச்சின் செயலாளர்தான் அவருக்குக் கட்டளையிடுவார். எனவே, தலைமைத்துவத்தை அமைச்சரவை பொறுப்பேற்க வேண்டும்.

ஜனநாயக நாட்டில் அரசியல், சிவில் அதிகாரம் மற்றும் இராணுவ அதிகாரம் ஆகிய மூன்று கட்டமைப்புகள் உள்ளன. இன்று இந்த ஆட்சி இராணுவ அதிகாரத்தைக் கையில் எடுத்துள்ளது. இது தவறான அணுகுமுறையாகும். குறிப்பாக முதலீட்டுச் சபையின் கலந்துரையாடலில் இராணுவ தளபதி உரையாற்றும் நிலை உருவாகியுள்ளது. இராணுவத் தளபதியுடன் எனக்கு தனிப்பட்ட ரீதியில் பிரச்சினை கிடையாது.

இந்த அரசுக்கு மக்கள் ஆணை வழங்கினர். அதன்பிரகாரம் செயற்படாது இராணுவ மயமாக்கலை நோக்கிப் பயணிக்கின்றது. அரசமைப்பு மற்றும் ஜனநாயகம் குறித்து விவாதிக்க விவாதமொன்று அவசியம்- என்றார்.(ஒ,4,44)

# எம்.பியானார் ரணில்



கொழும்பு,ஜூன் 24

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்றுச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போதே அவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

அதனை அடுத்து நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க முன்னிலையில், உறுப்பினர்களின் பதிவேட்டில் அவர் கையொப்பமிட்டார்.

ஆளுந்தரப்பிலிருந்து அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது. எதிரணி உறுப்பினர்கள் சிலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

சபைக்குள் எதிரணிப் பக்கம் முன்வரிசையில் 13ஆம் இலக்க ஆசனம் ரணிலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தாலும், 1977 ஆம் ஆண்டில் ரணில் பியகம தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற அரசியலை ஆரம்பித்தார்.

ஜே.ஆர். ஆட்சியில் அவருக்கு 28 வயதிலேயே பிரதி வெளிவிவகார அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி உட்பட முக்கிய பல அமைச்சுகளையும் வகித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி கவிழ்ந்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட்டார். அதன்பின்னர் பிரதமர் பதவியையும் வகித்துள்ளார்.

இலங்கையில் அதிக தடவை பிரதமராகப் பணியாற்றியவராகவும் (5 தடவைகள்) வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

1977 ஆம் ஆண்டு முதல் 2015 வரை நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் ரணில் தோற்கவே இல்லை. கடந்த தேர்தலில் தான் தோல்வியடைந்தார். 73 வயதான ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக 9 ஆவது பிரதி நிதித்துவத்தைப் பெற்றுள்ளார். . (ஒ,4,44)

# ரணிலின் வருகையால் எதிர்க்கட்சியினர் அச்சம்

ஆளுங்கட்சியினர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 24

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து ஐக்கிய மக்கள் சக்தியினர், சபைக்குள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. மாறாக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்தமையை எதிர்த்தே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ரணிலுக்கு இவர்கள், அஞ்சுகின்றனர். ஆனால், நாங்கள் அவருக்கு (ரணிலுக்கு) வாழ்த்துத் தெரிவிக்கின்றோம். இவ்வாறு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்தும், அதிகரிக்கப்பட்ட விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியும் ஐக்கிய மக்கள் சக்தியினர், சபைக்குள் நேற்று எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதனால்,சபைக்குள் சலசலப்பு ஏற்பட்டது.

கோஷங்களுக்கு மத்தியிலும் சபை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் எவருமே கேள்விகளைக் கேட்கவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த சாந்த பண்டார கேள்வியொன்றை எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விக்கான பதில்கள், சபையில் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன என்று விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தார். (ஒ,4)



## அதிகரிக்கும் கொரோனா

# மக்களை சுகாதார முறையில் வழி நடத்த தன்னார்வுத் தொண்டர்கள் முன்வரவும்

மன்னார் மாவட்டச் செயலர் அழைப்பு

மன்னார்,ஜூன் 24

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகமாக பரவும் நிலை காணப்படுவதால் மக்களுக்கு சுகாதார நடைமுறைகளை வழி நடத்த தன்னார்வுத் தொண்டர்கள் முன்வரவேண்டும் என்று மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மூன்று நாள்களாக மன்னார் மாவட்டத்தில் அதிகமானோர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் குறிப்பாக [illegible] ஈடுபடுவோரும், வெளி மாவட்டங்களில் குறிப்பாக வவுனியா, மதவாச்சி ஆடைத் தொழிற்சாலை களில் வேலை செய்வோரும் அதிகமாக இக் கொவிட் தொற்றுக்கு ஆளாகி யிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்கான மாற்று செயற்பாட்டை மேற்கொள்வதற்காக நாங்கள் ஆலோசனைகளை எடுத்துள்ளோம். அத்துடன் தற்பொழுது நாட்டில் பயணத்தடை நீக்கப்பட்டு போக்குவரத்துக்கான வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் சூழ்நிலை காணப்படுவதால் இதற்கான தடையையும் நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இவ் மாவட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பற்றாக்குறை காணப்படுவதால் இவர்கள் தங்களுக்குரிய முக்கிய கடமைகளை கவனிக்க வேண்டியிருப்பதால் இவர்களைக் கொண்டு மக்களின் சுகாதார நடைமுறைகளை கவனிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே கொவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக இளைஞர்களுக்கு கொவிட் பாதுகாப்பு உடைகளை வழங்கி இவர்களைக் கொண்டு மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் முகமாக செயற்பாட்டை மேற்கொள்வது என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இச் செயற்பாட்டை விரைவில் கொண்டுவருவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட இருகின்றது. ஆகவே ஒரு கட்டுக்கோப்புடன் மக்கள் மத்தியில் உதவக்கூடிய இளைஞர் யுவதிகள் மற்றும் தன்னார்வுத் தொண்டர்கள் இச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி எதிர்பார்க்கப்படுகின்றது - என்றார். (ஐ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் இராணுவ தளங்கள் அமெரிக்காவுக்கு வழங்கப்படாது

## இம்ரான்கான் உறுதி



இஸ்லாமபாத், ஜூன் 24
பாகிஸ்தானில் உள்ள இராணுவத் தளங்கள் அமெரிக்காவுக்கு வழங்கப்படாது என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான்.
ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க இராணுவம் முழுமையாக வெளியேறிய பின்னர் ஆப்கானில் முகாமிட்டுள்ள தலிபான்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க பாகிஸ்தானின் இராணுவத் தளங்களை அமெரிக்கா கேட்டிருந்த நிலையில் அந்தக் கோரிக்கையை இம்ரான்கான் நிராகரித்துள்ளார்.
'ஆப்கானிஸ்தானுக்குள் இருந்தே தலிபன்களை ஒன்றும் செய்ய முடியாதபோது பாகிஸ்தானுக்குள் இருந்து என்ன செய்துவிட முடியும்' என்றும் இம்ரான் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)



பயங்கரவாத அச்சுறுத்தல்

# நைஜீரியாவில் பள்ளிகள் மூடல்

நைஜர், ஜூன் 24
நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தும் பிற ஆயுதக்குழுக்கள் பள்ளி மாணவர்களை கடத்தி பணையக் கைதிகளாக சிறைப்பிடிக்கின்ற காரணத்தால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வது குறைந்துள்ளது. இதனால் பாடசாலைகள் மூடப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.
நைஜீரியாவில் கடும் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோ ரம் பயங்கரவாதிகள் அவ்வப்போது இத்தகைய சம்பவங்களை அரங்கேற்றுவதுடன் மாணவர்களை தற்கொலைத் தாரிகளாகவும் மாற்றுகின்றனர். இதையடுத்தே மாணவர் வருகை வீழ்ச்சியடைந்து பாடசாலைகள் பூட்டப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது. (ம)

# பைடனை சந்திக்கேன் ஈரான் அதிபர் உறுதி!



தெக்ரோன், ஜூன் 24
**ஈரானின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள இப்ராகிம் ரைசி, அமெரிக்க அதிபர் பைடனைச் சந்திக்கவோ பேச்சு நடத்தவோ மாட்டேன் என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.**

அதற்கு மிகக்குறைந்த வாய்ப்புக்கள்கூட இல்லை என்று அவர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
அமெரிக்க அதிபர் பைடனை சந்திக்கவோ பேச்சு நடத்தவோ நான் விரும்பில்லை. அவர்களுடன் (அமெரிக்கர்களுடன்) உறவு வைத்துக் கொள்வதை ஈரான் விரும்பியதில்லை. இனியும் அவ்வாறுதான். எனினும், ஈரானுக்கு அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு அமெரிக்காவுக்கு உண்டு. அதை அமெரிக்கா செய்ய வேண்டும்.
அதற்கு அனைத்து விதத்திலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.
ஈரானின் அதிபர் தேர்தலில் போட்டியிட்ட இன்னொரு வேட்பாளர், பைடனுடன் தான் நேரில் பேச்சு நடத்துவேன் என்று தெரிவித்திருந்தார். அவர் தேர்தலில் படுதோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ஸ்கொட்லாந்தை வீழ்த்தி முன்னேறியது குரோசியா

யூரோ, ஜூன் 24
யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஸ்கொட்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது குரோசியா.
ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் நிகொல்லா குரோசியாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.
மக்ரேகர் 42ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார்.
இதையடுத்து முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.
இரண்டாம் பாதியில் குரோசிய அணித்தலைவர் லூக்கா மோட்ரிச் 62ஆவது நிமிடத்திலும் இவன் பேர்சிக் 77ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது குரோசியா. (ம)

# செக்குடியரசை போராடி வீழ்த்தியது இங்கிலாந்து

யூரோ, ஜூன் 24
யூரோ கிண்ணத் தொடரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆட்டத்தில் செக்குடியரசை போராடி வென்றது இங்கிலாந்து.
ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் வீரர் ஸ்டெர்லிங் அந்த அணியின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து இரு அணிகளும் மேலதிக கோல்கள் எதையும் பதிவுசெய்யவில்லை. எனவே இங்கிலாந்தின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.
இரண்டாவது பாதியிலும் இரு அணிகளும் கடும் போராட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் கோல் கணக்கு மாறவில்லை.
முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இங்கிலாந்து. இந்த வெற்றியை அடுத்து 16 அணிகள் கொண்ட சுற்றுக்குச் செல்வதை இங்கிலாந்து உறுதிப்படுத்தியது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரப் பற்றாக்குறையால் பொருளாதாரம் சரியும்

## ஐ.ம.ச. எச்சரிக்கை



**கொழும்பு,ஜூன் 24**

**நாட்டில் உரப் பற்றாக்குறை ஏற்படுமாக இருந்தால், பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியடையும். ஏற்றுமதிகளும் பாதிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா வித்தானகே தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு, உரப் பற்றாக்குறை, அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு என்பவற்றோடு கொவிட் தொற்றின் காரணமாக நாடு இன்று பாரதூரமான நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது.

உரப் பற்றாக்குறையால் விவசாயம் கைவிடப்படுமாயின் நாட்டில் அரிசிப் பற்றாக்குறை ஏற்படும். அரிசி மாத்திரமின்றி பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரும் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்படும். தேயிலைத் தூள் ஏற்றுமதி குறைவடையுமாயின், அது இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த முறைமை தொடருமாயின் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் மரவள்ளிக் கிழங்கை அவித்து உட்கொண்ட யுகத்துக்குச் செல்ல நேரிடும். அரசின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் தொடரும் - என்றார். (ஒ.4)

# இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடு இராஜதந்திர மட்டத்தில் ஆராய்வு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 24

இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களில் சீனா பங்கேற்றிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதனால் இந்தியக் கடல் எல்லைகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன என்று இந்தியக் கடற்படையின் துணைத் தலைவர் வைஸ் அட்மிரல் அசோக் குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சர் கெஹெலிய மேலும் தெரிவிக்கையில்,

பூகோள அரசியலில் பிராந்தியப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் பல உள்ளன. வரலாறு முழுவதும் இவ்வாறான பிரச்சினைகள் காணப்பட்டன. பிரச்சி னைகள் இல்லை என்று கூற முடியாது. இவ்வாறான பிரச்சினைகளை இராஜதந்திர மட்டத்தில் கலந்துரையாடி, இதுவரை பயணித்ததைப் போன்று எதிர்காலத்திலும் பயணிக்க எதிர்பார்க்கின்றோம். பூகோள அரசியலில் சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அவற்றை நாம் உதாசீனப்படுத்தப்போவதில்லை. எனவே அரசு என்ற ரீதியில் அவ்வாறானதொரு ஆபத்து ஏற்படாது என நிலைப்பாட்டில் செயற்படாமல் , அவ்வாறொன்று நடைபெற்றால் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம். எனவே இது தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. என்றார். (ஒ.4)

## மனித நுகர்வுக்கு தகுதியற்ற

# 700 கிலோ கோழி இறைச்சியுடன் ஒருவர் கைது



வவுனியா, ஜூன் 24

மனித நுகர்வுக்கு தகுதியற்ற 700 கிலோகிராம் கோழி இறைச்சியைக் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டார்.

அநுராதபுரம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி 700 கிலோ கிராம் கோழி இறைச்சியை பாதுகாப்பற்ற முறையிலும், நுகர்வோர் பயன்படுத்த முடியாத நிலையிலும் கொண்டுசென்றபோதே அவர் வவுனியா ஈரட்டை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர். (ப-110)



# ராஜ மஹா விகாரையில் சிறப்பு வழிபாடுகள்

மன்னார்,ஜூன் 24

இலங்கை முழுவதும் அதிகரித்து வரும் கொரோனா பரவல் முற்றிலுமாக நீங்க வேண்டி மன்னார் மாதோட்ட ராஜ மஹா விகாரையில் நேற்றுமுன்தினம் இரவு சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து 7 நாள்கள் பிரித் ஓதி வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த வழிபாட்டு நிகழ்வில் தள்ளாடி 54 படைப் பிரிவு மேஜர் ஜெனரல் இந்திரஜித் பண்டார, மன்னார் மாவட்டச் செயலர் திருமதி.ஸ்ரான்லி டிமெல் மற்றும் மன்னார் பிரதேச செயலர் ம.பிரதீப் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-56)

# ஆமை வேகத்தில் உள்ளது பொலிஸாரின் செயற்பாடு

## மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஜூன் 24

சைக்கிள் ஒன்று ஆளில்லாது வீட்டின் முன் நிறுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸாருக்குத் தகவல் தெரியப்படுத்தியும் நீண்ட நேரம் கழித்தே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு 7.20 மணியளவில் மிதிவண்டி நிறுத்தப்பட்டு இருப்பதை அவதானித்த வீட்டின் உரிமையாளர், பதற்றத்துடன் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். எனினும் இரவு 9.15 மணிக்கே பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்தினர். களவுகள் மற்றும் விபத்துகள் போன்ற சம்ப வங்கள் பற்றி பொலிஸாருக்குத் தகவல் வழங்கினாலும்கூட நீண்ட நேரம் கழித்தே பொலிஸார் சம்பவ இடங்களுக்கு வருகின்றனர். நீண்டகாலமாகவே அவர்கள் இவ்வாறு நடந்துகொள்கின்றார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ப-13)



மூதூர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கொவிட் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது கர்ப்பிணித் தாய்மார்களுக்கான குடிதண்ணீர் மற்றும் பான ஏற்பாடுகளை மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் ஏற்பாடுசெய்தார். (ப)

# எரிபொருள் விலையேற்றம்: கண்டித்து ஜே.வி.பி. கவனவீப்பு

திருமலை, ஜூன் 24

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் திருகோணமலை மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்று காலை 10. 45 மணிக்கு கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இப் போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாட்



டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

"மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மரத்தில் இருந்து வீழ்ந்தவரை மாடு ஏறி மிதித்தது போன்று எரிபொருள்களின் விலையை அரசு அதிகரித்துள்ளது என்ற போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளி.மருத்துவமனைக்கு உபகரணம் கையளிப்பு

கிளிநொச்சி,ஜூன் 24

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு 23 லட்சத்து இருபது ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த டயலிஸ் இயந்திரம் (Dialysis Machine) நன்கொடையாக நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

நாடுபூராவும் நடைமுறைப்படுத்தப்படும் 'ஜன சுவய' கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சமூக நலத்திட்டத்தின் 16 ஆவது கட்டமாக இந்த இயந்திரம் வழங்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவால், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவனிடம் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

(ஐ-214)

# ஜெனீவாவில் இலங்கைமீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள்

## இலங்கை அரசு கண்டனம்

கொழும்பு,ஜூன் 24

**இலங்கை தொடர்பில் ஜெனீவா தொடர்ந்தும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலட் தற்போது முன்வைத்துள்ள கருத்துக்களும் இதனை ஒத்தவை. இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் ஊடாக பதிலளிக்கப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 47 ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலட், சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் 2 வருடங்கள் தடுத்து வைத்தல் மற்றும் பொலிஸ் பாதுகாப்பிலுள்ளோர் உயிரிழத்தல் தொடர்பில் உடனடியாக முழுமையான மற்றும் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவிக்கையில்,

நாம் தொடர்ச்சியாக பல சுற்றுப் பேச்சுக்கை முன்னெடுத்திருக்கின்றோம். இவ்வாறு முன்வைக் கப்படும் கருத்துக்கள் தொடர்பில் தேவையானளவுக்கு தெளிவுபடுத்தல்களையும் மேற்கொண்டோம். எனினும் ஆதாரங்களற்ற குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்படுகின்றன. இதற்கும் தகுந்த பதிலை வழங்குவோம் - என்றார்.

(ஒ,4)



# அடிபணியாத உயரிய இனமாம் பௌத்தம்

## ஞாபகமூட்டுகிறார் பிரதமர்

பௌத்த மதத்தை இனம் என்று கூறியுள்ள பிரதமர், பௌத்த இனம் வேறு எந்த இனத்துக்கும் அடிபணியாத உயரிய இனம் என்றும் தெரிவித்துள்ளார்.

பொசன் பூரணை தின வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது; தர்மாசோக மன்னனுக்கும், தேவநம்பியதீசனுக்கும் இடையிலான இராஜதந்திர நட்பின் சிறந்த விளைவாக இலங்கையில் பௌத்த சமயம் ஸ்ரீ புத்த ஆண்டு 236 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் எமது இனம், மதம் மற்றும் கலாசாரத்தின் புதிய யுகம் தோற்றம் பெற்றது. பௌத்த கலாசாரத்தில் கலை, கல்வி, பகுத்தறிவு, விவசாயம் ஆகிய அனைத்து துறைகளும் வளர்ச்சியடைந்தன. மஹிந்த தேரர் அறிமுகப்படுத்திய பௌத்தத்தின் உயிர் சக்தி காரணமாக, இலங்கையர்கள் உலகின் வேறு எந்த இனத்துக்கும் அடிபணியாத உயரிய இனமாக பௌத்தம் உருவெடுத்துள்ளது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். வேறு தினங்களில் பொசன் பூரணை தினத்தில் பக்தர்களால் நிறைந்து காணப்படும் மிஹிந்தலை புனித பூமி இன்று அவ்வாறு இல்லாதிருப்பதற்கு காரணம், மனித உயிர்களை காவுகொண்டு உலகெங்கும் பரவிவரும் கொவிட் - 19 தொற்று நோயிலிருந்து நாம் அனைவரும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவாகும் - என்றுள்ளது. (ப)

# சீன நிறுவனம் பணிபுரிவது அரசுக்குத் தெரியாதாம்

கொழும்பு,ஜூன் 24

இலங்கையில் குளங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தில் சீனா நிறுவனமும் பங்கேற்றுள்ளதை நாம் அறியோம். இந்த வேலைத்திட்டம் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பது எமக்குத் தெளிவாகத் தெரியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், 'குளங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களை சீன நிறுவனம் முன்னெடுத்து வருகிறது. மண் முதலானவற்றை குறித்த நிறுவனம் இலவசமாக அரசிடம் பெற்றுக் கொள்கின்றது, இது உண்மையா?' என எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இந்தப் பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான வேலைத்திட்டங்கள் சூழலியல் அதிகாரிகள் உள்ளிட்டோருடனான கலந்துரையாடல்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படும்.. ஆனால் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக மண் கொண்டுசெல்லப்படுகிறதா என்பது எனக்குத் தெரியாது. நாம் அறிந்த வரையில் இரண்டு இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவை தற்போது இயக்கப்படுகின்றன. அவை இலங்கையில் காணப்படும் கொள்முதல் முறைமைகளுக்கு அமைய கொள்வனவு செய்யப்பட்டவை. ஆனால் இலங்கையில் சுற்றாடல் பாதிப்பை ஏற்படும் செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை - என்றார். (ஒ,4)

# சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்ப அனைத்து சக்திகளையும் பிரயோகிப்பேன்

## ஜனாதிபதி கோத்தா உறுதி

கொழும்பு. ஜூன் 24

மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வதற்கும், சுபீட்சமானதொரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் எனது அனைத்து சக்திகளையும் அர்ப்பணிக்க நான் உறுதியாக உள்ளேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொசன் பூரணை தின வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது;

மஹிந்த தேரரின் வருகையானது, இலங்கை வரலாற்றில் சமய ரீதியான ஒரு முக்கிய மைல்கல் நிகழ்வு என்பதில் சந்தேகமில்லை. இதன் மூலம், சமூக, கலாசார மற்றும் அரசியல் ரீதியாக நாம் ஏராளமான நன்மைகளைப் பெற்றுள்ளோம். அரசனின் பத்துக் கடமைகளான 'தசராஜ தர்மத்தை' அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறை பற்றிய தனித்துவமான அணுகுமுறையுடன், ஒரு கீர்த்திமிக்க தேசமாக எமது நாட்டை நாம் உலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம். அந்த உன்னதமான கொள்கைகளை மதித்த, பண்டைய ஆட்சியாளர்கள் எமது நாட்டை சுபீட்சத்தை நோக்கி இட்டுச்சென்றனர். ஒரு சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஏதுவாக அமைந்த பௌத்த போதனைகளையும் தசராஜ தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஆட்சி எண்ணக்கருவை, எமது ஆட்சி நிர்வாகத்திலும் ஒரு முன்னுதாரணமாகக் கொள்வோம். மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வதற்கும் சுபீட்சமானதொரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், நாம் வாழும் பூமி, உயிரினங்கள் மற்றும் மரம் செடி கொடிகளை நேசிக்கும் பிரஜைகளாலேயே சாத்தியம் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். அதற்காக, எனது அனைத்து சக்தியையும் அர்ப்பணிக்க நான் உறுதியாக உள்ளேன். பண்டைய பாரம்பரியங்களுக்கு ஏற்ப, பொசன் பெரஹர, பந்தல்கள் அன்னதான நிகழ்வுகளை நடத்தி, மஹிந்த தேரரின் வருகையைக் கொண்டாடுவதற்கு தற்போதைய சூழல் எமக்கு இடம் தரவில்லை.



இருப்பினும், தற்போதைய கொவிட் தொற்றுப் பரவல் நிலைமைகளில் இருந்து பாதுகாப்பாக சமய நெறிமுறைகளைப் பின்பற்றி, மஹிந்த தேரரை நினைவுகூர்வதற்கான ஒழுங்குகள் பற்றி, மகாசங்கத்தினர் எமக்கு வழிகாட்டியுள்ளனர் - என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மகிழ்ச்சியளிக்கிறது

## அரசியல் கைதிகளின் பெற்றோர் நன்றி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**"தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில், நாடாளுமன்றில் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலானது எமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது" என்று தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

எமது உறவுகள் மீதான குற்றச்சாட்டுகளுக்காக, தண்டனைக் காலத்துக்கும் அதிகமான காலத்தை சிறையில் கழித்த பின்பும் அவர்களை தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது முறையல்ல என்பதையும், தெரிந்தோ தெரியாமலோ சந்தர்ப்ப சூழ்நிலைகளால் செய்திருக்கக்கூடிய செயற்பாடுகளுக்காக அவர்களது பாதி வாழ்க்கை வீணடிக்கப்பட்டு விட்டது என்பதையும் ஏற்றுக்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்தியேனும் நியாயத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ச நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதற்றடவையாக ஆளும் அரசின் பொறுப்புமிகு அமைச்சர் ஒருவர் இவ்வாறு கூறியிருப்பது எமது உறவுகளின் துரித விடுதலைக்கான நல்லெண்ண சமிக்ஞை என்றே நம்புகிறோம். அதுமட்டுமன்றி ஆளும் கட்சியை சேர்ந்த உறுப்பினர்களும் எதிர்த் தரப்பு உறுப்பினர்களும் அமைச்சர் நாமல் ராஜபக்சவின் வேண்டுகோளையும் அதற்கு சாதகமாக பதிலளித்த நீதி அமைச்சரின் கருத்தையும் முழு மனதோடு ஏற்றுக்கொண்டு கைதிகளின் விடுதலை விவகாரத்தை ஆதரித்திருந்தமை முக்கியமான விடயம்.

இது தொடர்பில் உயர் சபையின் சபாநாயகரும்கூட முக்கியமானதொரு விடயத்துக்கு அனைத்து உறுப்பினர்களும் எந்தவோர் எதிர்ப்பையும் காட்டாது உடன்பட்டிருந்ததையிட்டு நன்றி தெரிவித்துள்ளார்.

நெடுங்காலம் சிறையில் வாடும் எமது பிள்ளைகளின் உண்மை நிலையை சகோதர சமூகத்தின் மக்கள் பிரதிநிதிகள் உணர்ந்திருக்கின்றமையானது எமது உறவுகளின் விடுதலைக்கு தீர்வைத்



தருகின்ற முதற்புள்ளி என்றே கருதுகின்றோம். நடந்து முடிந்த போராட்டத்தின் பெயரில் நீண்டகாலமாக சிறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இனிமேலும் விளக்கமறியல் கைதிகள், தண்டனைக்கைதிகள், மேல் முறையீட்டு கைதிகள் என வகைபிரித்து பார்க்காமல் 'புனர்வாழ்வளித்தல்' போன்ற ஏதேனும் ஒரு பொதுப்பொறிமுறையினூடாக தடுத்த வைக்கப்பட்டுள்ள அனைவருக்குமான விடுதலையை பெற்றுக்கொடுப்பதே தர்மம் ஆகும்.

சமூகங்களுக்கிடையில் புரையோடிப்போயுள்ள இன முரண்பாடுகளுக்கு தீர்வைப்பெற இதனை விடப் பொருத்தமானதொரு நல்லெண்ணச்செயற்பாட்டை அடையாளம் காண முடியாது. எனவே அரசு இந்தத்தருணத்தை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் இன, சமூக முரண்பாடுகளற்ற இலங்கைத்தேசத்தை சமாதான பூமியாக மாற்றி அனைவரும் இன்புற்றுவாழ முடியும் என பொறுப்புடன் நிச்சயப்படுத்துகின்றோம்.

கனிந்துள்ள இந்த பொன்னான தருணத்தின் பொறுப்புணர்ந்து இனம், மதம், மொழி, கட்சி, கொள்கை, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் சிந்தித்து செயலாற்றுமாறு பிள்ளைகளை பிரிந்து வாழும் தாயுள்ளங்களான நாம், பிராத்தனையோடு வேண்டுகோள் விடுக்கிறோம். - என்றுள்ளது. (து)




# நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதாரத் தொண்டர்கள் கவனவீர்ப்பு

வவுனியா, ஜூன் 24

தகைமைபாராது சேவைக்கால அடிப்படையில் நியமனம் வழங்குமாறு கோரி சுகாதாரத் தொண்டர்களால் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாக காலை 9.30 மணிக்கு குறித்த ஆர்பாட்டம் இடம்பெற்றது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

சுகாதாரத் தொண்டர்களாகிய நாம் கடந்த சில வருடங்களுக்கு மேலாக எதுவித வேதனமும் இன்றி தொண்டராகக் கடமையாற்றி இருந்தோம்.

இதுவரையும் எமது நியமனம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்காததால் கடந்த 2017- 2018ஆம் ஆண்டுகளில் நியமனம் கோரி 120 நாள்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டோம். 2019 ஆம் ஆண்டு மே, மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டன.

தற்போது எமது நியமனங்களில் கவனம் செலுத்தாது, ஒரு லட்சம் வேலை வாய்ப்பினூடாக எமது சுகாதாரத் தொண்டர் பட்டியலில் இருந்து சேவைக்காலம் குறைந்தவர்களையும், சுகாதாரத் தொண்டராகக் கட்மையாற்றாதவர்களுக்குமான நேர்முகத்தேர்வு வவுனியா பிரதேச செயலகத்தில் இன்று (நேற்று) நடைபெறுகின்றது. குறித்த நேர்முகத்தேர்வை நிறுத்தி, தொண்டராகச் சேவையாற்றிய அனைத்து சுகாதாரத் தொண்டர்களுக்கும் நியாயமாக சேவைக்கால அடிப்படையில் தகமை பாராது நியமன்ங்களை வழங்குவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்றனர். இது தொடர்பில் அவர்கள் வவுனியா பிரதேச செயலாளரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

"வடமாகாண பிரதம செயலாளரால் வழங்கப்பட்ட பட்டியலுக்கு அமைய குறித்த 28 பேருக்கு இன்று (நேற்று) நேர்முகத் தேர்வுகள் இடம்பெறுகின்றன. ஏனையவர்களின் பட்டியல் எதிர்காலத்தில் கிடைக்கும் பட்சத்தில் நேர்முகத் தேர்வுகளை நடத்துவோம்" என்று பிரதேச செயலாளர் ஆர்பாட்டகாரர்களிடம் தெரிவித்தார். (ப-110)

## இன்றைய நாள்





**மேடம்:** காலநேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரக்கூடும். முடிவுகள் எடுப்பதில் தயக்கம், தடுமாற்றம் வந்து நீங்கும். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம்.



**இடபம்:** பணத்தட்டுப்பாடு நீங்கும். இயல்பான கோபம் வரும். நண்பர்களுக்கு இடையே இருந்த மனக்கசப்பை நீக்குவீர்கள். பேச்சினால் தொல்லை ஏற்படாதபடி கவனமாக இருங்கள்.



**மிதுனம்:** பிறருடைய நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு கொடுப்பீர்கள். உங்களின் நேர்மையான உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். எதிர்ப்புகளைச் சமாளித்து நிம்மதி காண்பீர்கள்.



**கடகம்:** மனஅமைதி கூடும். பிள்ளைகளால் சிறு விரயம் உண்டு. உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். மன அழுத்தம் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்



**சிம்மம்:** உங்களை குறைகூறியவர்களுக்கு பதிலடி கொடுப்பீர்கள். தேங்கிக் கிடந்த வேலைகள் மடமடவென்று முடியும். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்



**கன்னி:** பதவி உயர்வு, சம்பள உயர்வுக்கான முயற்சி செய்வீர்கள். வெளிநாடு தொடர்பான விஷயங்களில் ஈடுபாடு ஏற்படும். உறவினரின் ஆதரவு அதிகரிக்கும். மனநிம்மதி கூடும்.



**துலாம்:** உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். புதிய வாய்ப்புகள் அதிகரிக்கும். நன்மைகள் கூடுதலாகும். காத்திருந்த ஒரு திருமணம் சிறப்பாக முடியும்.



**விருச்சிகம்:** தடைகள், தாமதங்கள் இருப்பது பற்றிச் சலிப்படையாதீர்கள். பண விவகாரங்களில் சிறிதளவு மனஅழுத்தம் வந்து நீங்கும். புதிய திட்டங்கள் தொடங்குவீர்கள்.



**தனுசு:** உங்கள் மேல் இருந்த குற்றச்சாட்டு தீர்வதற்கான நிகழ்வு நடக்கும். பொறுப்பு காரணமாக பணியில் சீரான வளர்ச்சியைக் காணலாம். பணிச்சுமை குறைவதற்கான யுக்திகளை காண்பீர்கள்.



**மகரம்:** உறவினிடையே உங்கள் கை ஓங்கும்படி உயர்வு வரும். ஆடம்பரச் செலவைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். சேமிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பீர்கள்.



**கும்பம்:** எதிர்பாலின நட்பால் ஆதாயம் உண்டு. கவனமாக இருங்கள். சிறு உபாதை பற்றிக் கவலை வேண்டாம். மன உற்சாகம் உண்டு. உறவினிடையே புகழ் கூடும்.



**மீனம்:** பிள்ளைகளால் ஏற்பட்ட மனஅழுத்தம் அவர்களாலேயே தீரும். சிறு பயணம் மகிழ்ச்சி தரும். சிறிய நற்செய்தி உண்டு. வேற்று இன மனிதர்களுக்கு உதவுவதால் நெகிழ்வீர்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அல்வாயில்...

500 பேருக்கும் மேற்பட்டவர்கள் ஒன்று கூடி கொரோனாக் கட்டுப்பாட்டை மீறி முகக்கவசம் இன்றியும் தனியாள் இடைவெளி பேணாமலும் வேள்வி மற்றும் பொங்கல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் கிடைத்த தகவலின்படி, அங்குசென்ற பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் பருத்தித்துறை பொலிஸாரும் இணைந்து மேற்படி 30 பேரையும் தனிமைப்படுத்தினர். நிர்வாகியைக் கைதுசெய்தனர். அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சம்பவ இடத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களதும் பொலிஸாரதும் கடமைக்கு இடையூறு விளைவித்தார், அச்சுறுத்தல் விடுத்தார் என்று கூறப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்யமுற்பட்டபோது அவர் தப்பியோடிவிட்டார் என்றும், அவர் தொடர்பான காணொலி மற்றும் ஒளிப்பட ஆதாரங்களைக்கொண்டு அவரைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் இவ்வாறு பொறுப்பற்ற விதமாக ஒன்றுகூடுவதால், நோய்த்தொற்று விரைவில் பரவ வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

### மணமகனுக்கு...

மேலும் திருமணத்தில் பங்கேற்ற 39 பேருக்கு எதிராகவும், மண்டபத்தை வழங்கிய 2 பேருக்கு எதிராகவும் தனித்தனியாக குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பிரான்பற்றில் இந்த மாத ஆரம்பத்தில் திருமண நிகழ்வு நடைபெற்றது. குடும்ப உறுப்பினர்களுடன் மாத்திரம் திருமண நிகழ்வு நடத்துவதற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அனுமதி வழங்கியிருந்தார். ஆனால் அதற்கு மாறாக பலரை ஒன்றுகூட்டி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

இது தொடர்பில் அறிந்து சுகாதாரப் பகுதியினர் திருமண நிகழ்வில் பங்கேற்ற 47 குடும்பங்களைத் தனிமைப்படுத்தியிருந்தனர். கடந்த 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தனிமைப்படுத்தலை மீறி பயணத்தடைக் காலத்தில், வழங்கப்பட்ட அனுமதிக்கு மாறாக திருமண நிகழ்வு நடத்தப்பட்டமை தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மணமகனது பெயருக்கே சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தமையால் அவரையே பிரதிவாதியாக சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டிருந்தனர்.

மன்றில் நீதிபதி, மணமகனுக்கு கடுமையான எச்சரிக்கையை விடுத்தார்.

6 மாதங்கள் வரையில் இந்தக் குற்றத்துக்காக சிறைத் தண்டனை வழங்க முடியும் என்றும் எச்சரித்தார். சுகாதாரப் பகுதியினர் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுகையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கண்டித்தார். 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

அத்துடன் மணமகனின் சகோதரர், தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் வெளிநாடு சென்றுள்ளார்.

அவர் தொடர்பான விவரங்களை சுகாதாரப் பகுதியினருக்கு வழங்கவும் மன்று பணித்தது. (ஒ.5)

### இன்று...

நாளை அதிகாலை 4 மணிக்கு பயணத்தடை நீக்கப்படவுள்ளது என்று கொரோனாத்தடுப்புச் செயலணி முன்னரே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


## ஈரு விழிகளுடன் ஈரண்டு நினைவலைகள்



### அமரர் சத்தியசீலன் லதர்ஷன்

B.B.A. Hons (Fm. Spl - University of Jaffna)
கணக்குப் பதிவாளர் - யாழ். பல்கலைக்கழகம்)

| மனம் மகிழ | மனம் நெகிழ |
| --- | --- |
| 10.12.1989 | 24.06.2019 |

அன்புத் தெய்வமே எம் மகனே!
ஆண்டிரெண்டு கழிந்தாலும் ஆறவில்லை உன் துயர்
எம்மை மன ஏக்கத்துடன் தவிக்க விட்டு
எங்கய்யா சென்றீர்?
செல்ல மகனாய் பண்பான மாணவனாய்
பாசத்துடன் வளர்ந்து வந்தாய்
பல்கலையும் சென்று பட்டத்தையும் தனதாக்கினாய்
பார் போற்ற உன் கல்விக்கு
பதவிகளையும் பெற்று கொண்டாய் மகனே!
காலம் தானிருக்க எம்மை கண்ணீரில் ஆழ்த்தி விட்டு
விண்ணோடு சென்றதேனோ மகனே!
வேதனையில் வாடுகின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கேணியடி வீதி,
கொக்குவில்.

களையிழந்து வாடும்
அப்பா, அம்மா மற்றும் குடும்பத்தினர்


## நேற்று தொற்று 2,178

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 178 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 46 ஆயிரத்து 91 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 11 ஆயிரத்து 186 ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 136 ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி விநாயகமூர்த்தி

(முன்னாள் ஊழியர் சீமெந்து கூட்டுத்தாபனம்,
முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 08.04.1934 | 23.06.2021 |

வேதாரணியர்வளவு உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் அராலி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (23.06.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சுகிர்தம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற துரைரத்தினம் - ரோசரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நிஷங்கா தேவியின் பாசமிகு கணவரும், தர்மேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், ராமகிருஷ்ணா மற்றும் ஜெகதீஸ்வரி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சச்சிதானந்தம், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பாலச்சந்திரன், பாக்கியநாதன் - சரோஜினிதேவி, மற்றும் மோகனதாஸ்-இரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனரும், கௌரி, சக்திகுமார், சுபத்திரா, கேதீசன், தாமோதரன், தர்சினி, சுகேசினி, துவாரகன், துஷாரகன், லக்சிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தராஜ், வசந்தரூபி, ஜெயரூபி, சுபாரூபி, வனஜா, சந்திரிக்கா, கீதா, அகிலன் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை.
077 165 2411

தகவல்:
குடும்பத்தினர்.



## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

076 702 3565



## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 21 . 04 . 1947 | 03 . 07 . 2012 |

### திருமதி பரஞ்சோதி வள்ளிப்பிள்ளை

திதி: பூரணை

குடும்பத்தின் ஜீவனாகி குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ கொண்டுமைச் சென்றதுவோ
ஆண்டொன்பது போனாலும் ஆறாது உங்கள் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு மீளாதோ உங்கள் வாழ்வு
கண்ணீரால் தான் நனைந்து கரைக்கின்றோம் எம் வாழ்வை
மண் மீது உமை எண்ணும் மனதோடு வாழ்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இத்திரானை
கந்தரோடை, சுன்னாகம்.

கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றொரு நீதிபதியும் விலகினார்

கொழும்பு, ஜுன் 24

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலனைசெய்யும் நீதிபதிகள் குழாமில் இருந்து மேலும் ஒரு நீதிபதி நேற்று விலகியுள்ளார்.

தனிப்பட்ட காரணத்தால் குறித்த மனுக்களைப் பரிசீலிப்பதிலிருந்து விலகுகின்றேன் என்று நீதிபதிகள் குழாம் உறுப்பினரான ஏ.எச்.எம்.டி. நவாஸ் அறிவித்துள்ளார். குறித்த மனுக்களைப் பரிசீலிப்பதிலிருந்து ஏற்கனவே ஒரு நீதிபதி விலகியிருந்தநிலையில், மற்றொரு நீதிபதி நேற்று விலகியுள்ளார். தம்மைக் கைதுசெய்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருந்தல் சட்ட விரோதமானது என்ற தீர்ப்பை வழங்குமாறு கோரி அவர்களால் குறித்த அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை இராஜேந்திரன்

(இளைப்பாறிய மேலதிக பொது முகாமையாளர்
(R 2) - இலங்கை மின்சார சபை (C.E.B), கொழும்பு)



பிறப்பு 11.11.1945 — இறப்பு 22.06.2021

வேலுப்பிள்ளை இராஜேந்திரன் அவர்கள் கடந்த (22.06.2021) செவ்வாய்க்கிழமை அன்று தெஹிவளையிலுள்ள இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.வேலுப்பிள்ளை திருமதி கதிராசிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. வீரகத்தி (கனக சபை) திருமதி பார்வதி ஆகியோரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சகுந்தலாதேவியின் ஆருயிர்க் கணவரும், ரமேஷ் (சிட்னி), ஷர்மிலா (தெஹிவளை), ஜெனா (மெல்பேர்ன்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், சுதர்ஷினி (சிட்னி), பரணீதரன் (தெஹிவளை), துர்க்கா (மெல்பர்ன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற பத்மலோசனி, தவமணி, மனோன்மணி, காலஞ்சென்ற நீலலோசனி, மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திசைவீரசிங்கம் (பிறைசூடி), காலஞ்சென்ற செல்வகுலசிங்கம், இரத்தினசிங்கம், அருந்தவநாயகி, இந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், பிரிஷி, ஹெமானி, சஹானா மற்றும் பகுலேயன் ஆகியோரின் அன்புக்கும் பாசத்துக்குமுரிய பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளின் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு:
பரணி (மருமகன்) : +94714101270
ரமேஷ் (மகன்) : +61466006240
ஜெனா (மகன்) : +61404484285

தகவல்:
பரணீதரன் (மருமகன்)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 08 . 1939 — மறைவு 28 . 06 . 2018



எமது அன்புத் தெய்வம்

### அமரர் செல்லையா தம்பிப்பிள்ளை

(Diploma in Printing ஓய்வு நிலை உத்தியோகத்தர்
அரசாங்க அச்சகம் முன்னாள் உத்தியோகத்தர் – வீரகேசரி பத்திரிகை)
புங்குடுதீவு – 06

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் அகலாது உம்
அன்பு முகம் எம் நெஞ்சை விட்டு - அப்பா
உரிமை சொல்ல ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்ற உறவுக்கு யாருமே நிகர் இல்லை அப்பா
பண்பை உணர்த்தி படிப்பை ஊட்டி எம் உணர்வு
உணர்ந்து உன் வழி எதுவோ அவ்வழி செல்" என
எமக்கோர் நல் ஆசானாய் இருந்த அப்பாவே
இன் சொல்லில் இனியவராய் பொறுமையில் சிகரமாய்
எமக்கு நல்வழி காட்டிய தந்தையே!
உங்களோடு வாழ்ந்த காலங்கள் எங்கள் வாழ்வின் பொக்கிசங்கள்

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 04 . 1943 — மறைவு 22 . 06 . 2021



### துரையர் சந்தணம்

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்பாசனத் திணைக்களம்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட துரையர் சந்தணம் அவர்கள் நேற்று முந்தினம் (22.06.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையர் பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா பொன்னி தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், கௌரிபாலன் (கைத்தொழில் திணைக்களம் - வடமாகாணம்), செந்தில் பாலன் (நகர சபை - வவுனியா), தவபாலன் (கல்வி அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துரைராசா, குணராசா, துரைசிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத உத்தியோகத்தர்) மற்றும் இராசலட்சுமி, நவரத்தினராணி, இராசமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கஜந்தினி, யமுனாராணி (ஆசிரியை - விபுலானந்தா கல்லூரி - வவுனியா), சியாமினி (விலை மதிப்பீட்டுத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற இராசதுரை, துரையம்மா, தவமணி, பரந்தாமன், மற்றும் பேபி, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்தனரும் நியந்தரி, மகஸ்ரீதா, அதிஸ்டிதா, ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி

தகவல்:
குடும்பத்தினர்
077 665 7065

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 03 . 1949 — மறைவு 22 . 06 . 2021



### வேலுப்பிள்ளை நடராசா

(தலைவர் கலாபூஷணம் சித்தாந்த வித்தகர்,
முன்னாள் காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்)

காரைநகர் களபூமி வளுப்போடையைப் பிறப்பிடமாகவும் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா (தலைவர் கலா பூஷணம் சித்தாந்த வித்தகர், முன்னாள் காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்) நேற்று முந்தினம் (22.06.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னகுட்டியின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தியாகலிங்கம் அவர்களின் அன்பு சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தனலட்சமி, நவரட்ணம்(சுவிஸ்), புஸ்பலட்சுமி (வவுனியா), சறோசா (சுவிஸ்) ஞானச்சந்திரன் (பிரான்ஸ்), கவிதா (இலண்டன்), மோகனாஸ்ரீ (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நகுலேஸ்வரன் (யாழ்ப்பாணம்), கேதீஸ்வரி (சுவிஸ்), நடேசரத்தினம் (வவுனியா), அமிர்தலிங்கம் (சுவிஸ்), ஜெயப்பிரியா (பிரான்ஸ்), காசிநாதன் (லண்டன்), விமலரூபன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்திகா, சரண்ஜா, டிசாகரன், தினேஸ், தருண், அபிராமி, அஸ்வின், அக்ஷயா, கவின், அபிஷன், மகிழினி, குமரன், அமலன், அபிஷா, சஸ்வகன், சான்விகா, சரண் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.06.2021 செவ்வாய்க்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் தில்லை மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி - மகேஸ்வரி - 021 225 1834,
மகன் - நவரட்ணம் - 0041 779117543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசியல்...

பொதுமன்னிப்பில் விடுதலை செய்யக்கூடிய 17 சந்தேகநபர்களின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே நேற்று தெரிவித்தார்.

இன்று பொசன் பூரணையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் இவர்களை விடுதலை செய்ய முடியும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

எனினும், ஜனாதிபதியின் தீர்மானம் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே நேற்று மாலை தெரிவித்தார். இதேவேளை, ஜனாதிபதியின் தீர்மானம் இன்று தமக்கு கிடைக்கும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார். (த-22)

## தமிழ்க்...

தனால், இடையூறுகள் ஏற்பட்டிருந்தால் அவற்றுக்கு நான் வருத்தம் தெரிவிக்கின்றேன்."

இவ்வாறு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் வெகுவிரைவில் சந்திப்புக்கான திகதியை அறிவிப்பேன் என்றும் அந்தக் கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இதேவேளை, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில் விடயங்கள் இடம்பெறும்போது, தமது கட்சி அது குறித்து முடிவெடுக்கும் எனவும் இரா.சம்பந்தன் மேலும் கூறினார்.

அமைச்சர் உதய கம்பன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று நாடாளுமன்றத்துக்கு வருகை தராதமையால், உத்தியோகபூர்வமாக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை நடத்த முடியாமல் போனது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-22)

## தொற்றால்...

சைபெற்றுவந்த 70 வயதுடைய மூதாட்டி ஒருவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்-19 நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 73ஆக உயர்வடைந்துள்ளது.

**வவுனியா**

வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த 77 வயது முதியவர் ஒருவர் கொவிட் தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்தார்.

தென்பகுதியைச் சேர்ந்த குறித்த முதியவர் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில், வவுனியா மூன்று முறிப்பில் அமைந்துள்ள கொரோனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டு வவுனியா மருத்துவமனையின் கொரோனா விடுதியில் நேற்று சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26,110)

## சாவு....

தவர்களில் 40 ஆண்களும், 25 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 769 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## வடக்கில்...

590 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், 39 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அதன்படி, அதிகளவாக சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகிய இடங்களில் தலா 3 பேருக்கும், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை மற்றும் மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு என்பவற்றில் தலா இருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை, பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனை, ஆனைவிழுந்தகுளம் கொரோனா இடைத்தங்கல் நிலையம் மற்றும் பம்பைமடு ஐ.சி.சி. ஆகியவற்றில் தலா ஒவ்வொருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில், நேற்று 337 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 16 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதன்படி, சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இரவு 374 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் மூவருக்கும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனை, பூந்தோட்டம் தனிமைப்படுத்தல் நிலையம் ஆகியவற்றில் தலா ஒவ்வொருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த-5)

## அரசுக்கு...

மக்கள் விரைவில் வீதிக்கு இறங்கிப் போராடுவார்கள்" என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அரசின் ஆபத்தான நகர்வுகள் குறித்து சில வாரங்களுக்கு முன்னரும் அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்தநிலையில், நிகழ்கால அரசியல் நிலவரம் குறித்து அவர் நேற்று தெரிவிக்கையில்,

**அரசு மீதான நம்பிக்கை இழப்பு**

பெரும் எதிர்பார்ப்பின் மத்தியில் நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். தேசியம் மற்றும் நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு அரசு செயற்படும் என்று எதிர்பார்த்தே அரசுக்கு ஆதரவு வழங்கினோம். தேர்தல் காலத்தில் நாட்டு மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்திய கொள்கைக்கு, முரணாகவே அரசு தற்போது செயற்படுகிறது. ஆகவே அரசின் மீதான நம்பிக்கை முழுமையாக இல்லாதொழிந்து விட்டது.

அரசின் முறையற்ற செயற்பாட்டால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியிலும், உளவியல் ரீதியிலும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கொவிட் 19 பிரச்சினை, கப்பல் தீ விபத்து பிரச்சினை, எரிபொருள் விலையேற்றம் மற்றும் உரப் பற்றாக்குறை என பலதரப்பட்ட பிரச்சினைகளை நடுத்தர மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள். இத்தகைய பிரச்சினைகளுக்கு இதுவரையில் உரிய தீர்வு முன்வைக்கப்படவில்லை.

**ஏமாற்றிவிட்ட அரசு**

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரத்தை இலவசமாக வழங்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசின் நிர்வாகத்தில் அதிக விலைக்குகூட உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நெருக்கடி நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள். இரசாயன உரப் பாவனையைத் தடைசெய்யும் திட்டத்தை வரவேற்கிறோம். ஆனால் அதற்கு ஆரம்பத்தில் ஒரு சிறந்த திட்டத்தை அரசு செயற்படுத்தியிருக்க வேண்டும்.

**பிக்குகளும் வீதிக்கு இறங்குவர்**

விவசாயிகள் தங்களின் வயல் நிலங்களில் இருந்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். ஆகவே இவர்களை வீதிக்கு இறக்கும் செயற்பாட்டை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும். இல்லாவிடின் அரசுக்கு எதிராக நாமும் வீதிக்கு இறங்கி போராட நேரிடும்.

**பொறுப்புக்கூறுபவர் யார்?**

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் முறையற்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. எவர் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதில் போட்டித்தன்மை காணப்படுவதால் இறுதியில் பொறுப்புக் கூறுபவர்கள் எவருமில்லை.

**கொரோனாத் தடுப்பை பிரதமர் ஏற்க வேண்டும்**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் நேற்று ஆற்றிய உரை வரவேற்கத்தக்கது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளின் பொறுப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ச பொறுப்பேற்க வேண்டும் என ஆரம்பத்தில் இருந்து தெரிவித்தோம். அவர் இந்த விடயத்தில் மௌனம் காப்பது நெருக்கடிகளை தீவிரப்படுத்துமே தவிர சீர்செய்யாது. என்றார். (த-இ)

## ரணில்...

டும். நாம் அதற்குரிய நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றோம்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருப்பதன் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மாறாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர் ஜனாதிபதியாக வேண்டும்.

அவர் ஜனாதிபதியாகாவிட்டால், நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை யேற்படும். நடப்பது சாத்தியமில்லை என்று நினைக்கும் விடயங்கள் இப்போது சாத்தியமாகிக்கொண்டு வருகின்றன.

**கால அவகாசம்**

கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. கட்சியின் யாப்புக்கு எதிராக செயற்பட்டவர்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் யாப்பை மீறி செயற்படக்கூடியவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். முறையற்ற விதத்தில் செயற்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அவர்களது தவறை உணர்ந்து திருத்திக்கொண்டு மீண்டும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கான காலஅவகாசத்தை வழங்கியிருந்தோம். அதற்கேற்ப கட்சியுடன் மீண்டும் இணைந்து செயற்பட விரும்புபவர்களை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, தொடர்ந்தும் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக செயற்படுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் கம்பளை மாநகரசபை உறுப்பினர்கள் எமது கட்சியுடன் இணைந்து கொண்டதைப்போன்று, மேலும் சில மாநகரசபை உறுப்பினர்கள் எம்முடன் இணைவதற்குத் தயார்நிலையில் இருக்கின்றார்கள்.

**அவர்களாகவே பிரிந்து வருவார்கள்**

அடுத்ததாக ஐக்கிய மக்கள் சக்தியை வலுவிழக்கச்செய்வதே எமது நோக்கம் என்று சிலர் கூறுகின்றார்கள். ஆனால் அந்தக் கட்சியை வலுவிழக்கச்செய்வதற்கான செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கத் தேவையில்லை. மாறாக அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தும் அதற்கேற்றவாறுதான் அமைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவடையச்செய்து புதிதாக உருவாக்கப்பட்ட எந்தவொரு கட்சிகளும் சிறப்பாக செயற்பட்டதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய அனைத்துக் கட்சிகளும் அந்தப் பட்டியலிலேயே அடங்குகின்றன. - என்றார். (த-இ)

## குருநகரில்...

ஜே/69 மற்றும் ஜே/71 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த ஒருவாரத்தில் சுமார் 125க்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். அதனையடுத்து குறித்த பகுதிகளை முடக்குவதற்கு சுகாதாரத் தரப்பினர் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பகுதிகளை முடக்குவது பற்றிய பரிந்துரை சுகாதாரத் தரப்பிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது, என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலரும் மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் இணைத் தலைவருமான க.மகேஸ்வரன் தெரிவித்தார். (த-20)

## கிளிநொச்சி...

னும், அவரை மோதிய வாகனம் தப்பிச் சென்றுவிட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம், கிளிநொச்சி கனகபுரம் டிப்போ வீதியில் அம்பாள்குளம் பொருளாதார சந்தைக்கருகில் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த அருளானந்தம் மைக்கல் (வயது - 49) என்பவரே உயிரிழந்தார்.

உந்துருளியில் பயணித்தவரை பட்டா அல்லது மகேந்திர ரக வாகனம் மோதிவிட்டு தப்பிச்சென்றுள்ளது என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்போது, தலைப் பகுதியில் படுகாயமடைந்தவரை அவசர நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. கிளிநொச்சிப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-214)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் உலகக்கிண்ணத்தை தனதாக்கியது நியூசிலாந்து!

**சவுத்தாம்டன், ஜூன் 24**

**உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிண்ணத்தைத் தனதாக்கியது நியூசிலாந்து அணி. ஆட்டத்தின் மேலதிக நாளான நேற்று இந்தியாவை 8 இலக்கு களால் வீழ்த்தி கிண்ணத்தைக் கொண்டு சென்றது நியூசிலாந்து. இந்தக் கிண்ணம் நியூசிலாந்து அணிக்குக் கிடைத்த முதலாவது பெரிய கிண்ணமாகும்.**




நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி இந்திய அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இந்திய அணி முதல் இன்னிங்ஸுக்காக 217 ஓட்டங்களைப் பெற்றது. ரகானே அதிகபட்சமாக 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெமிசன் 5 இலக்குகளையும், போல்ட், வாக்நெர் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸுக்காக 249 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கொன்வே 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சமி 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இந்திய அணி நேற்று வெறும் 170 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. பன்ட் அதிகபட்சமாக 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சவுத்தி 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு 139 ஓட்டங்கள்தான் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான லாதம் 9 ஓட்டங்களுடனும், கொன்வே 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தாலும் வில்லியம்சன், ரெய்லர் இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் நிலைத்துநின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தனர்.

**கிரிக்கெட் உலகின் மிகப்பெரிய கிண்ணம்**

டெஸ்ட் ஆட்டங்கள்தான் கிரிக்கெட் உலகின் நியவடிவம். பாரம்பரியமும் அதுவே. இதனால் டெஸ்ட் உலகக்கிண்ணம்தான் கிரிக்கெட் உலகின் பெரும் மகுடம் என்று கருதப்பட்ட நிலையில் அதை நியூசிலாந்து கைப்பற்றியது. (ம)





# உருகுவே - சிலி ஆட்டம் சமநிலை

பிரேசிலியா, ஜூன் 24

கோபா அமெரிக்காத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற உருகுவே - சிலி இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் வர்காஸ் சிலியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்தக் கோல்களும் பதிவாகாத நிலையில் சிலியின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் உருகுவே கொஞ்சம் கூடுதலான போராட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

62வது நிமிடத்தில் அணித்தலைவர் சுவாரஸ் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 1:1 என்று ஆட்டம் சமநிலையானது. (ம)

# ஆர்ஜென்ரினா அபார வெற்றி புள்ளிப்பட்டியலில் முதலிடம்

பிரேசிலியா, ஜூன் 24

கோப்பா அமெரிக்காத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் பராகுவேயை போராடி வீழ்த்தியது ஆர்ஜென்ரீனா அணி.

ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் அலென்ரியோ கோமேஸ் ஆர்ஜென்ரீனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அந்த அணி முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது.

இரண்டாவது பாதியில் எந்தக் கோல்களும் பதிவாகவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஆர்ஜென்ரீனா அணி.

ஆர்ஜென்ரீனா அணி ஏ பிரிவில் முதலாம் இடத்தில் நீடிக்கின்றது.

அந்த அணி மூன்று ஆட்டங்களில் விளையாடி இரு வெற்றிகளையும் ஒரு சமநிலையையும் சந்தித்துள்ளது. (ம)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org